விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 24 செவ்வாக்கிழமை (06.05.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 139




## முகமாலையில் நேற்று மோதல்

(கிளிநொச்சி)

முகமாலையூடாகப் படையினர் மேற்கொண்ட முன்னகர்வு முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. இதில் 8 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 20 ற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என புலிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.பின் தளங்களிலிருந்து சரமாரியான பல்குழல் வெடிகணைகள் மற்றும் ஆட்லறி எறிகணைச் சூட்டாதரவுடன் நேற்று முற்பகல் 10 மணியளவில் முகமாலையிலுள்ள விடுதலைப்புலிகளின் காவலரண்கள் மீது படையினர் தாக் (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கான ஆயுத விநியோகத்தை சர்வதேச சமூகம் நிறுத்த வேண்டும்

### இலங்கை அரசாங்கம் வேண்டுகோள்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்குவதை நிறுத்துமாறு இலங்கை அரசாங்கம் சர்வதேச நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளிக்காதவர்களுக்கு ஆயுதங்கள் விநியோகிக்கப்படுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சர்வதேச சமூகத்திடம் ஐ.நாவுக்கான இலங்கை நிரந்தரப் பிரதிநிதி பிரசாத் காரியவசம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நியூயோர்க்கில் கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற சிறு ஆயுதங்கள் தொடர்பான பாதுகாப்புச் சபை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இக்கோரிக்கையை முன்வைத்தார்.

ஒரு அரசாங்கம் அல்லாத குழுக்களிடம் ஆயுதங்கள் வழங்கப்படுவது ஆபத்தானது. அவர்கள் அதனை தமது அரசியல் அபிலாஷைகளுக் (10 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பிலிருந்து தமிழ் மக்கள் வெளியேற்றப்பட மாட்டார்கள்

## ரணில் பயணித்த ஹெலி அவசரமாகத் தரையிறக்கம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பயணித்த ஹெலி கொப்டர் நேற்று மாலை தொழில்நுட்பக் கோளாறினால் திடீரென தரையிறக்கப்பட்டது.

கிழக்கு மாகாண தேர்தல் பிரசார நடவடிக்கைக்காக மட்டக்களப்புக்கு நேற்று விஜயம் செய்த எதிர்க்கட்சித் தலைவர் அங்கிருந்து கொழும்பு நோக்கி நேற்று மாலை பயணித்துக் கொண்டிருந்த போதே ஹெலிகொப்டரில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து நேற்று மாலை 5.30 மணியளவில் எதிர்க்கட்சித் தலைவர் பயணித்த ஹெலிகொப்டர் மையங்களை விளையாட்டு மைதானத்தில் திடீரென தரையிறக்கப்பட்டது. தொழில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## சட்டமா அதிபர் மன்றில் உறுதியளிப்பு

(கொழும்பு)

**கொழும்பிலிருந்து தமிழ் மக்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட மாட்டார்கள் என சட்டமா அதிபர் நேற்று உயர் நீதிமன்றத்தில் உறுதி வழங்கியுள்ளார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலிஸ்மா அதிபர் ஆகியோர் சார்பிலேயே இந்த உறுதிமொழியை சட்டமா அதிபர் வழங்கியுள்ளார்.** (10 ஆம் பக்கம் பார்க்க)

## ★யாழ்.உயர் பாதுகாப்பு வலயத்தில்★ மீள்குடியமர்வை துரிதப்படுத்துமாறு பாதுகாப்புச் செயலருக்கு உத்தரவு

(கொழும்பு)

யாழ்ப்பாணம் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில்,தெரிவு செய்யப்பட்ட விவசாயக் குடும்பங்களை மீளக் குடியமர்த்துவதற்குரிய நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, யாழ்.மாவட்ட விவசாயக் காணிகளிலிருந்து விவசாயக் குடும்பங்கள் வெளியேற்றப்பட்டமையை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

அம்மனு நேற்று உயர் நீதிமன்றில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ளது. யாழ்.அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் 454 விவசாயக் குடும்பங்களை மீளக் குடியேற்றுவதற்கு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரினால் இனங்காணப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## 40 இலங்கை அகதிகள் தனுஷ்கோடி சென்றனர்

(சென்னை)

இலங்கையில் இருந்து 40 அகதிகள் நேற்று தனுஷ்கோடிக் கரையைச் சென்றடைந்துள்ளனர்.

இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் தொடர்ந்து வரும் உக்கிர மோதல்களையடுத்துப் படகுகள் மூலம் தமிழகத்திற்கு வரும் அகதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

அந்த வகையில் நேற்று தனுஷ்கோடி அருகேயுள்ள முகுந்தராயர் சத்திரத்திற்கு 40 பேர் அகதிகளாகச் சென்றுள்ளனர். இவர்களிடம் தனுஷ்கோடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ச-5)

## கடற்படையின் முகாம் மீது மன்னாரில் புலிகள் தாக்குதல்

(மன்னார்)

மன்னார் பள்ளிக்குடாவில் கடற்படையினரின் காவல் நிலை மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய தாக்குதலில் 3 ,கடற்படையினர் கொல்லப்பட்டுள்ளனர். ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளதாவது,

பள்ளிக்குடா கோந்தைப்பிட்டியில் உள்ள கடற்படையினரின் காவல் நிலை மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை 2 மணியளவில் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் 3 கடற்படையினர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் கடற்படையை சேர்ந்த ஒருவரின் சடலமும் ஆயுதங்களும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## மகேஸ்வரன் எம்.பியின் கொலையுடன் முதலாவது சந்தேக நபருக்குத் தொடர்பு

### நீதிமன்றிற்கு அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனின் கொலைச் சம்பவத்துடன் முதலாவது சந்தேகநபருக்கு நேரடித் தொடர்பு இருப்பது மரபணுப் பரிசோதனை மூலம் நிரூபணமாகியுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவு பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அருண சேனாநாயக்க கொழும்பு நீதிமன்றத்தில் நேற்று இதனைத் தெரிவித்துள்ளார். மகேஸ்வரனின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

மகேஸ்வரனின் (10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# போலி வாக்காளர் அட்டைகளை விநியோகிக்க அரசு நடவடிக்கை

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் போலி வாக்காளர் அட்டைகளை மக்களுக்கு வழங்கி தேர்தலில் வெற்றி பெறுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்திருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கூறினார்.

இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான பட்டியலை திரட்டியிருக்கும் அரசாங்கம் அவர்களின் பெயர்களுக்கு வாக்காளர் அட்டைகளை நிரப்பி அரசாங்கத்துக்கு ஆதரவாக செயற்படும் ஒருவரிடம் கையளித்துள்ளது. அரசாங்கத்துக்கு ஆதரவானவர்களைக் கொண்டு போலி வாக்களிக்கும் நோக்கிலேயே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர் குற்றஞ்சாட்டினார்.

இவ்வாறு போலி வாக்களிப்பதற்கு ஏதுவாக கிராம சேவகர்கள் ஊடாக போலி அடையாள அட்டைகளும் வழங்குவதற்கு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான ஒரு இலட்சத்து 70ஆயிரம் வாக்காளர் அட்டைகள் இன்னமும் விநியோகிக்கப்படாமல் தபால் நிலையங்களிலேயே வைக்கப்பட்டிருப்பதாக அவர் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் நீதியாகவும் சுதந்திரமாகவும் தேர்தல் நடைபெறுவதற்கு ஏதுவான சூழ்நிலையை உறுதிப்படுத்த அரசாங்கம், தேர்தல் ஆணையாளர், பொலிஸ்மா அதிபர் ஆகியோர் தவறியிருப்பதாக கூறியிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி இதற்கு எதிராக இன்று சத்தியாக்கிரகப் போராட்டமொன்றை நடத்தவுள்ளது

இப்போராட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு தேர்தல் திணைக்களத்திற்கு முன்னால் நடைபெறும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்புக்குத் தலைமை வகிக்கும் பிள்ளையான் தரப்பின் ஆயுதங்களை களையாமல் தேர்தல் நடத்தப்படுகின்றமைக்கும் இன்று நடைபெறும் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் எதிர்ப்பு தெரிவிக்கப்படுமென அவர் கூறியுள்ளார். (ச-5)

## அதிபர்களுக்கான செயலமர்வு

க.பொ.த சாதாரண தரப்பரீட்சைக்குத தோற்றியவர்களில் 50 சதவீதத்திற்கு குறைவாக க.பொ.த உயர்தரத்துக்கு தகுதிபெற்ற மாணவர்களைக் கொண்ட யாழ்ப்பாணக் கோட்டப்பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு நாளை இடம்பெறவுள்ளதாக கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

இச் செயலமர்வு யாழ.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் அனைத்து பாடசாலை அதிபர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ச-2)

## கருத்தரங்கு

இலக்கியமும் இந்துப் பண்பாடும். இந்து நாகரிக கருத்தரங்கு பேராசிரியர் கலைவாணி இராமநாதன் தலைமையில் நாளை புதிய கலைப்பீட விரிவுரை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. இந்த நிகழ்வின் தொடக்கவுரையை கலாநிதி மா.வேதநாதன் நிகழ்த்துவார். கருத்துரையை முதுநிலை விரிவுரையாளர் விக்னேஸ்வரி பவநேசன், 'தமிழ் இலக்கியத்தில் பெண்கள்' என்ற பொருளில் கருத்துரையை வழங்கவுள்ளார். (ச-2)



சென்.ஜோன்ஸ் கல்லூரியில் கடந்த 3ஆம் திகதி நடைபெற்ற கண்காட்சியை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் பார்வையிடுவதை முதலாவது படத்திலும் கண்காட்சியினை பார்வையிடும் மாணவர்களை மற்றைய படங்களிலும் காணலாம். (படங்கள்: அபி,மாறன்)

# கடந்த வருட மோதல்களில் 213 இராணுவத்தினரே பலி

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

கடந்த 2007ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுடன் இடம் பெற்ற மோதல்களில் 2 ஆயிரம் இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக வெளியாகிய ஊடகத் தகவலை இராணுவம் மறுத்துள்ளது.

2007ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற மோதல்களில் 2 ஆயிரம் இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 4 ஆயிரம் இராணுவத்தினர் காயமடைந்ததாக கடந்த வாரம் இராணுவ உயர் அதிகாரிகளிடம் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சரத் பொன்சேகா கூறியிருந்ததாக ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

அந்தக் கூட்டத்தில் நான் கலந்து கொண்டிருக்கவில்லை. எனினும் கடந்த வருடம் இராணுவத்தில் அவ்வளவு இழப்பு ஏற்படவில்லை என ஏ.எவ்.பி செய்திச் சேவைக்கு கருத்துத் தெரிவித்திருந்த இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கடந்த 2007 ஆம் ஆண்டில் 213 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 829 பேர் காயமடைந்துள்ளனர். எனினும் விடுதலைப் புலிகள் தரப்பில் 5 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் தகவல்களை மேற்கோள் காட்டி ஏ.எவ்.பி செய்தி வெளியிட்டுள்ளது.

இரண்டு தரப்பினரும் தமக்கு ஏற்பட்ட இழப்புக்களை குறைத்து கூறிவருவதுடன் எதிர்த்தரப்பினரின் இழப்புக்களை அதிகரித்து கூறிவருவதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)


### கூறுவிலை கோரல்

24000 BTU Spilit type Airconditionar 03 Nos (LG Make) வழங்குவதற்கான கூறுவிலை தகுதியான வழங்குனரிடமிருந்து வைத்தியசாலைப்பணிப்பாளரினால் கோரப்படுகின்றது. தங்களது கூறுவிலையை 21.05.2008 முற்பகல் 10.00 மணிக்கு முன்பாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும். கூறுவிலை தங்கள் முன்னிலையில் 21.05. 2008 முற்பகல் 10.30க்கு திறக்கப்படும்.

பணிப்பாளர்.
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(C-1086)

### கேள்வி கோரல்

### போதனா வைத்தியசாலை மின்சார பராமரிப்பு

யாழ்.போதனா வைத்தியசாலையில் 01.07.2008 இல் இருந்து 31.06.2009 வரைக்கும் மின்சாரப் பராமரிப்பு வேலைக்கு மின்சாரப் பராமரிப்பு பதிவுடைய ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்வி கோரப்படுகிறது. கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினம் 21.05.2008 காலை 10.00 மணி ஆகும். கேள்விப்பத்திரங்கள் அன்றையதினம் காலை 10.30 மணிக்கு தங்கள் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்களை 16.05.2008 வரை மீளளிக்கப்படும் கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 4,500/-ம் மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 500/-ம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். பராமரிப்பு சம்பந்தமான கடமைகளும் நிபந்தனைகளும் கேள்விப்பத்திரத்துடன் வழங்கப்படும்.

பணிப்பாளர். (C-1088)

### தேவை

1. ஆங்கில தட்டச்சாளர் (English Typist) உடன்தேவை. ஓய்வு பெற்றவர் விரும்பத்தக்கது.

மேலதிக தகைமை:-
அரசாங்க உத்தரவாதம் பெற்ற மொழி பெயர்ப்பாளர்(Sworn Translator)

2. கணனி இயக்குநர் ஒருவர் தேவை உடன் தொடர்புகொள்ளவும்

கனன் போட்டோ கொப்பி
பஸ்நிலையம், பருத்தித்துறை.
T.P:-226 3236
(C-1085)

### யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி



ஸ்கந்தா அதிபர்
திருமிகு க.சிவாஜி
அவர்களின்
மணிவிழா
அழைப்பிதழ்

காலம் :- 07-05-2008 புதன்கிழமை பி.ப.12.30 மணி
இடம் :- ஒறேற்றர் சுப்பிரமணியம் மண்டபம்
தலைவர் :- செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள்
(அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

பழைய மாணவர்கள், கல்லூரி அபிமானிகள், கல்வி சார் சமூகத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மணிவிழாக் குழு, ஸ்கந்தா சமூகம்

## இன்று ஒரு தகவல்

# தற்பெருமை

மனிதனுக்கு உடம்பும், அறிவும் வலுவாக இருக்க வேண்டும். ஆனால் சிலபேருக்கு உடம்பு பலமாக இருக்கும். சிலபேருக்கு அறிவு பலமாக இருக்கும். அதே நேரம், அவர்களிடம் இன்னொரு பலவீனமும் இருக்கும். அதாவது தற்பெருமை.

தான் பெரிய பலசாலி என்ற நினைப்பு அவர்களிடம் இருந்து கொண்டேயிருக்கும். பலம் இருந்தும் பல சந்தர்ப்பங்களில் அவர்களது தோல்விக்குக் காரணம் இந்தத் தற்பெருமை தான்! சீனாவில் ஒரு அறிஞர் இருந் தார். அவரின் பெயர் ''எப்பெண்டி''.

ஒருநாள் அவரைத்தேடி ஒருவன் வந்தான். அவன் பெரிய பலசாலி. அதாவது உடம்பால் பெரிய பலசாலி. அவன் இவரைப்பார்த்து "ஐயா... நான் ரொம்பபலசாலி! நீங்களோ அறிவால் பலசாலி... நாம் இருவரும் சேர்ந்து நண்பர்களாக இருப்போம்'' என்றான்.

அந்தப் பெரியவர் அவனைக் கொஞ்சநேரம் உற்றுப் பார்த்தார். பின்னர் அவனிடம் ''சரி, நீ எந்த வகையில் பலசாலி?'' என்று கேட்டார். உடனே அவன் தன்னைப்பற்றிக்கூற ஆரம்பித்தான்.

''என்னால் ஒரு பெரிய பாறாங்கல்லையே அலாக்காகத் தூக்க முடியும். நம்முடைய ஊர் எல்லையில் நின்று கல்லைத் தூக்கி எறிந்தால் அது நகரத்தை தாண்டிப் போய் உள்ளே விழுமளவுக்கு அவ்வளவு வேகமாக கல்லை வீச என்னால் முடியும்'' என்றான்.

"சரி... வா சோதனை செய்து பார்ப்போம்'' என்று கூறிய அந்தப்பெரியவர் அவனை அந்த நகரத்தின் மைதானப் பகுதிக்கு அழைத்துச்சென்றார். தன்னுடைய சட்டைப்பையிலிருந்து ஒரு சின்ன பட்டுக்கைக்குட்டையை எடுத்து அவனிடம் கொடுத்து. "நீ பெரிய பலசாலி என்கிறாய் இதோ இந்தத் துணியை சுவருக்கு வெளியே போய் விழுமாறு உன்னால் எறிய முடியுமா?'' என்றார்.

அதற்கு அவன், "ஒரு பெரிய பாறாங்கல்லையே தூக்கி எறிபவன் நான். இந்தச் சின்னத்துணியையா என்னால் தூக்கி எறிய முடியாது? தாருங்கள் அதை'' என்று வேண்டி பலம் கொண்ட மட்டும் வேகமாக வீசி எறிந்தான்.

கனம் இல்லாத அந்தக்கைக்குட்டை சுவரைத்தாண்டிப் போகவில்லை. கொஞ்ச தூரம் மேலே போய் திரும்பவும் வந்து தரையிலேயே விழுந்தது. பெரியவர் சிரித்துக் கொண்டே என்ன நண்பா முடியவில்லையா? என்று கேட்டார். அவன் பேசாமல் நின் றான். ''என்னால்முடியும்'' என்றார் பெரியவர். அவன் ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்தான்.

பெரியவர் அந்தக் கைக்குட்டையை எடுத்தார். ஒரு சிறியகல்லை அந்தத் துணிக்குள்ளே வைத்தார். கல் தெரியாத அளவுக்கு துணியால் மூடிச்சுருட்டிப்பிடித்து, அந்தக் கல்லுடன் சேர்ந்து கைக்குட்டையை வேகமாக எறிந்தார்.

அந்தத் துணியும் கல்லுட்ன் சேர்ந்து சுவருக்கு வெளியில்போய் விழுந்தது. இப்பொழுதுதான் அவனுக்குப் புரிந்தது. உடல் பலத்தைவிட அறிவு பலம் தான் பெரிதென்பது. உடல் பலமும் அறிவுபலமும் சேர்ந்து இருந்தால் சில சமயங்களில் ஆபத்தும் ஏற்படலாம்.

உடல் பலம் பொருந்தியது சிங்கம். அதற்கு அறிவும் இருந்துவிட்டால் என்ன ஆகும் தெரியுமா? அதை விளக்க ஒரு கதை. ஒரு ஆசாமி காட்டுவழியால் போய்க் கொண்டிருந்தான். திடீரென ஒரு சிங்கம் எதிரில் வந்துவிட்டது. இந்த ஆளுக்கு ஒன்றுமே புரியவில்லை. உடனே அந்த இடத்தில் உட்கார்ந்து கடவுளை தியானிக்க ஆரம்பித்தான். இதைப்பார்த்ததும், சிங்கமும் அவனுக்கருகில் வந்து உட்கார்ந்து கண்ணை மூடிக்கொண்டது.

அந்த ஆளுக்கு இதைப் பார்த்ததும், மனதில் லேசான சந்தோஷம். அவன் சிங்கத்திடம் சொன்னான் ''சகோதரனே உன்னைப் பார்த்ததும் உயிர் போய் விடுமோ என்று பயந்தேன். ஆனால் நீயும் என்னுடன் சேர்ந்து கடவுளை தியானிக்க ஆரம்பித்தாய். எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா!'' என்றான். உடனே அந்தச் சிங்கம், ''பேசாமல் இரு... சத்தம்போடாதே... உன்னை எனக்கு இரையாகக் கொடுத்ததற்காக இறைவனுக்கு கண்ணை மூடி நன்றி சொல்லிக்கொண்டிருக்கிறேன்'' என்றது.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# கிழக்கு தேர்தலின் பின்னர் பொதுத் தேர்தல் சாத்தியம்

## -வடமேல் மாகாண சபையின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் பின்னர் சிலவேளை பொதுத் தேர்தல் நடைபெறலாம் என்று வடமேல் மாகாண சபையின் தலைவர் தர்மசிறி தஸநாயக்க தெரிவித்தார்.

வடமேல் மாகாண ஊடகவியலாளர் ஒன்றிய பொதுக்கூட்டம் அண்மையில் குருநாகல் மாநகர சபை கேட்போர் கூடத்தில் ஒன்றியத் தலைவர் ஜனூர் கிச்சிலான் தலைமையில் நடைபெற்றது. அங்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அவர் மேலும் கூறியதாவது,

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு மிக முக்கியம். ஆனால் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு யுத்தத்தின் மூலமே தீர்வு காணப்படவேண்டும். முன்னர் யுத்தம் புரிந்தவர்கள் ஒழுங்கான முறையில் அதைக் கொண்டு நடத்தவில்லை. தற்போதைய எமது பாதுகாப்புச் செயலாளர் யுத்த அனுபவம் மிக்கவர். முப்படைகளையும் இணைத்து அவர் யுத்தம் புரிந்து வருகின்றார். இதன் காரணமாக நாம் இப்போது வன்னியை நெருங்கி உள்ளோம்.

கிழக்கு மாகாண மக்களுக்கு ஒரு விடியலை நாம் ஏற்படுத்தி கொடுத்தது போல் வட மாகாண மக்களுக்கும் விரைவில் விடியலை ஏற்படுத்துவோம். பிளவுபட்ட இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஒரு நாடாக விரைவில் மலரும்.

வடமேல் மாகாண சபையில் எதிர்க்கட்சியினரின் பலம் ஓங்கியிருப்பது உண்மை. சில வேளை இதன் காரணமாக மாகாண சபையின் செயற்பாடுகளை கொண்டு நடத்த முடி யாமல் போகலாம்.

மாகா ணசபை கலைக்கப்பட்டாலும். அதன் பதவிக்காலம் முடியும் வரை ஆளுநரின் அதிகாரத்தின் கீழ் கொண்டு நடத்த முடியும். அடுத்த மாகாண சபை பதவியேற்கும் வரை அவைத் தலைவர் செயலாற்ற முடியும்.

ஊடகவியலாளர்கள் இன்று அரசியல்வாதிகளை பயங்கரவாதிகளாகவே பார்க்கின்றனர்.' இது கவலைக்குரிய விடயம். அவர்கள் நடுநிலையாக செயற்படவேண்டும் என்றார். (அ-5)

# 'வித்தி'யின் 84ஆவது நினைவு கருத்தாடல் நிகழ்வுகள் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் சமகாலத்தில்

ஈழத்தில் தமிழ் மொழிவளர்ச்சிக்கும் தமிழ்ப் பாரம்பரிய உயர்ச்சிக்கும் நாட்டார் வழக்கியல் விருத்திக்கும் அரும் பாடுபட்ட பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தனின் 84 ஆவது நினைவுக் கருத்தாடல் நிகழ்வுகள் எதிர்வரும் 8ஆம் திகதி அவரது பிறந்ததினத்தில் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் சமகால நிகழ்வுகளாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் யாழ்.பல்கலைக்கழகத்திலும் கொழும்பில் பேராசிரியர் சோ.சந்திரசேகரம் தலைமையில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலும் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாண நிகழ்வுகளை குழந்தை சண்முகலிங்கத்தைத் தலைவராகக் கொண்ட பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் அறக்கட்டளையும், கொழும்பு நிகழ்வுகளை பேராசிரியர் சோ.சந்திரசேகரத்தை தலைவராகக் கொண்ட பேராசிரியர் வித்தியாணந்தன் நினைவுக் குழுவும் ஏற்பாடு செய்துள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் வாழ்த்துரையும், யாழ்.பல்கலைக் கழக கலாநிதி கலாமணியின் இசை நாடகமும் ''நேற்று -இன்று - நாளை'' என்ற தலைப்பிலான நினைவுரையும், யாழ்.பல்கலைக் கழக மாணவரின் "காத்தவராயன் கூத்தும்'' இடம் பெறவுள்ளன. இவ் விழாவிற்கான ஏற்பாடுகளை அறக் கட்டளையின் இணைப்பாளர் கலாநிதி நி.விசாகரூபன் கவனித்து வருகின்றார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் வரவேற்புரையை அகவிழி ஆசிரியர் தெ.மதுசூதனன் நிகழ்த்துகின்றார். கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விக்கும் பொறுப்பான பிரதம ஆணையாளர் கே.முகமட்தம்பி நினைவுரை நிகழ்த்தவுள்ளார். பேராசிரியர் சு.வித்தியானந்தனின் ''இலக்கியத் தென்றல்'' எனும் நூல் மீள்பதிப்பாக வெளியிடப்படுகின்றது.

வெளியீட்டுரையை பேராசிரியர் சபா ஜெயராசா நிகழ்த்துகின்றார். கொழும்பு இராமநாதன் கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்ச்சியும், கஜந்தப்பா குழுவினரின் நாட்டார் பாடல் இசை நிகழ்வும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இவ் விழாவிற்கான ஏற்பாடுகளை நினைவுக் குழு வின் இணைச் செயலாளர் கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் கவனித்து வருகின்றார். (அ)

## இராசிபலன்

06.05.2008

(சித்திரை 24, செவ்வாய்க்கிழமை)

பிரதமை பிற்பகல் 04.02 மணிவரை

கார்த்திகை பின்னிரவு 01.38 மணி வரை

இராகுகாலம் 02.55-04.25 மணிவரை

சுபநேரம் 11.56-11.55 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | வெகுமானம், கௌரவமான நிலை, நல்லமுயற்சி, போசனசுகம். |
| இடபம் | சோம்பல்நிலை, தனவிரயம், சுப செலவு, காரிய இடையூறு. |
| மிதுனம் | தனதானிய சேர்க்கை, தெய்வ சிந்தை, சுபகாரியம். |
| கடகம் | பெரியோரால் மதிக்கப்படுதல், இஷ்டசித்தி. நன்கொடை. |
| சிங்கம் | அதிகசெலவு, சரீரப்பிரயாசை, கட்டுப்பாடு, நிலைமாற்றம். |
| கன்னி | அஜீரணக் கோளாறு, பொருள் விரயம், காரிய தாமதம், கலகம். |
| துலாம் | மனோதைரியம், அபூர்வசந்திப்பு, நல்ல தகவல், தெய்வ தரிசனம். |
| விருச்சிகம் | மனமகிழ்ச்சி, செய்தொழில் விருத்தி, பகைவர் நேசம். |
| தனுசு | பணக்குறைவு, அஜீரண ரோகம், காரிய இடையூறு, கௌரவக்குறைவு. |
| மகரம் | மனச்சஞ்சலம், தனவிரயம், தெய்வசிந்தை, முயற்சி தாமதம். |
| கும்பம் | நற்கீர்த்தி, தேகநலன், அதிக பிரயாசை, காரிய அனுகூலம். |
| மீனம் | சோம்பல்நிலை, சுபகாரியச் செலவு, கௌரவக்குறைவு, அதிகசெலவு. |

வளவன்

# கருணாவை விடுதலை செய்வதற்கு பிரித்தானிய அரசு தீர்மானம்

## - லங்காதீப தகவல்

(கொழும்பு)

பிரித்தானிய பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் தலைவர் கருணாவை எதிர்வரும் சில நாட்களுக்குள் அந்நாட்டு அரசாங்கம் விடுதலைசெய்ய தீர்மானித்துள்ளது.

கடந்த சில காலமாகவே சிறைவாசம் அனுபவித்துவரும் அவரது நன்னடத்தை குறித்து முன்வைக்கப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட அந்நாட்டு நீதிமன்றம் அவரை வெகுவிரைவில் விடுதலை செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவர் போலிக் கடவுச்சீட்டின் மூலம் பிரித்தானியாவுக்கு பயணித்ததான குற்றச்சாட்டின் பேரில் அந்நாட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த 9 மாதங்களாக சிறை வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# எஸ்.பி.யை எம்.பி.யாக நியமிக்கக் கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சரும் ஐ.தே. கட்சியின் தேசிய அமைப்பாளருமான எஸ்.பி.திஸாநாயக்கவை தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட வேண்டுமென கட்சியின் முக்கியஸ்தர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக தனது தேசியப் பட்டியல் எம்.பி.பதவியைத் துறந்த பஷீர் சேகுதாவூத்தின் இடத்திற்கே எஸ்.பி.நியமிக்கப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு. எஸ்.பி.யிடமிருந்து பறிக்கப்பட்ட குடியுரிமையை மீண்டும் வழங்க வேண்டுமென்று வலியுறுத்தி கூட்டங்களை நடத்த வேண்டுமென்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் தீர்மானித்திருப்பதாகவும் தெரிய வருகிறது. (அ-5)

## வலைப்பின்னல் சேவையில் இலங்கை வங்கி கச்சேரிக் கிளை

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி ,யாழ். கச்சேரிக்கிளை வங்கி வலைப்பின்னல் சேவையுடன் இணைக்கும் வைபவம் நாளை புதன்கிழமை காலை 9.45 மணிக்கு இலங்கை வங்கி உதவிப் பொதுமுகாமையாளர் பொ.அ.அருமை நாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நாடளாவிய வலைப்பின்னல் சேவையை அரசாங்க அதிபர் க.கணேஷ் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கவுள்ளார். (அ-7)

## கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்தக் கோரிக்கை

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கசிப்பு உற்பத்தி கூடிய இடங்களில் அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மது வரித்திணைக்கள அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்தவேண்டும் என கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நடந்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பிரதேச செயலாளரினால் கூட்டத்தில் கலந்து கொண்ட மதுவரித்திணைக்கள அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. (அ-134)

## வீதி திருத்தம்

(யாழ்ப்பாணம்)

கைதடி ,நீர்வேலி இணைப்பு வீதி வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

இவ்வீதிக்கான மர நடுகை முடிவுற்றுள்ளதென உள்ளூராட்சி உதவியாளரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-134)

## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க பரப்புரைக் கூட்டம்

(நல்லூர்)

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ் மாவட்டக் கிளையினரின் செஞ்சிலுவைச் சங்க செயற்பாடுகள் தொடர்பான பரப்புரைக் கூட் டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 11 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இப்பரப்புரைக்கூட்டத்தில் யாழ்.மாவட்டக் கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் தலைமையிலான குழுவில் செஞ்சிலுவைச்சங்க வடக்கு கிழக்கு இணைப்பாளர் கு.பாலகிருஷ்ணன் ஆளுநர்சபை உறுப்பினர்கள் பேராசிரியர் குகபாலன் எஸ்.துரைரத்தினம் மாவட்டக் கிளையின் பரப்புரையாளர் இ.மயில்வாகனம் ஆகியோர் கலந்து கொண்டு பரப்புரை நிகழ்த்துவார்கள். (அ)

## பெண் நாய்களுக்கான கருத்தடை தடுப்பூசி

(சுதுமலை)

வளர்ப்புப் பெண்நாய்களுக்கான இலவச கருத்தடை தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 1.30 மணிக்கு சுதுமலை தெற்கு யுவசக்தி சனசமூக நிலையத்தில் நடைபெறுமெனவும் பதிவுகளை சனசமூகநிலையத் தலைவரிடமும் மேற்கொள்ளுமாறும் சுதுமலை சுகாதாரப் பரிசோதகர் அறிவித்துள்ளார். (அ-7)

## நெடுந்தீவு நடமாடும் ஆய்வுச் சேவையில் சுகாதார ஊழியர் தேவைகள் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் சுகாதார ஊழியர்களுக்கான நடமாடும் ஆய்வுச் சேவை அண்மையில் நடைபெற்றது.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்களின் நிர்வாகத்தேவைகள் ஆய்வு செய்யப்பட்டு நிறைவு செய்யப்பட்டன.

கடந்த வாரம் நடைபெற்ற நடமாடும் ஆய்வுச்சேவையில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆர். கேதீஸ்வரன் , தாய் சேய் நல வைத்திய அதிகாரி டாக்டர் தி.சிவசங்கர், நிர்வாக உத்தியோகத்தர் எஸ். சிவலிங்கம், கணக்காளர் கே.ஆர். துரைசிங்கம் , மாவட்ட மருந்தாளர் ஆர்.குமாரதாசன் உட்பட 36 அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

சுகாதாரசேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் அமைந்துள்ள வைத்தியசாலைகள், பிரதேச வைத்திய அதிகாரிகள் அலுவலகங்களில் பணி புரியும் அலுவலர்களின் தேவைகளை நேரடியாக இனங்கண்டு நிறைவு செய்வதற்கு இந்த நடமாடும் ஆய்வுச்சேவைகள் நடத்தப்படுகின்றன. இதன் மூலம் ஊழியர்களின் சுய விபரக்கோவைகள் பூர்த்தி செய்தல், வரலாற்றுத்தாழ்கள் நிறைவு செய்தல், ஓய்வூதியக்கொடுப்பனவுகளை குறுகிய கால இடைவெளியில் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்தல் இதுவரை காலமும் ஊழியர்களுக்கு வழங்கப்படாமல் இருக்கும் கொடுப்பனவுகள் மற்றும் சம்பள நிலுவைகளை நிறைவு செய்து வழங்கல் போன்றனவும் ஊழியர்களுக்கு இதுவரை காலமும் நிர்வாக ரீதியில் வழங்கப்படாதவற்றை வழங்குவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்திக்கொடுப்பதற்கு இந்த நடமாடும் ஆய்வுச் சேவை மூலம் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. (அ-5)

## வாரத்தில் ஐந்து நாட்கள் குமுதினிப் படகுசேவை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவிற்கான குமுதினிப் படகுச் சேவையை வாரத்தில் ஐந்து நாட்களுக்கு நடாத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய பயணிகள் படகுச்சேவையை ஞாயிறு, திங்கள், புதன், வியாழன், வெள்ளி போன்ற வார நாட்களில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

குமுதினிப்படகுச்சேவை குறிகட்டுவான் இறங்குதுறை முகத்திற்கும் ,நெடுந்தீவு மாவிலி இறங்குதுறைக்குமிடையே நடைபெற்றுவருகிறது.

இந்த சேவை முன்னர் வாரத்தில் இரு தினங்கள் மட்டுமே நடைபெற்றுவந்தது. சுமார் 30 வருடங்கள் பழமை வாய்ந்த இந்த சேவையினை வீதி அபிவிருத்தி அதிகார சபை நடாத்தி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (ஓ-7)

## விவசாயிகள் பிரதேசம் இரு அலகுகளாக பிரிப்பு

(நவாலி)

நவாலி விவசாயிகள் பிரதேசம் இரண்டே நிர்வாக அலகுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. சண்டிலிப்பாய் பெரும்பாக அலுவலர் வை.பாலகிருஷ்ணன் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

நவாலி விவசாயிகள் சம்மேளனம் நவாலி வடக்கு , நவாலி தெற்கு, நவாலி கிழக்கு ஆகிய 3 கிராம அலுவலர்களைக் கொண்ட பாரிய பிரதேசமாகும்.

இதில் நவாலி வடக்கு விவசாயிகள் சம்மேளனம் பரந்த பிரதேசத்தினையும் 380 விவசாயிகளையும் கொண்டுள்ளது. நவாலி கிழக்கு,தெற்கு கிராம அலுவலர் பிரிவுகள் குறைந்த அளவிலான விவசாயிகளையே கொண்டுள்ளது.

இதனாலேயே நவாலி வடக்கு விவசாயம் என்ற அலகு ஒரு பிரிவாகவும் நவாலி தெற்கு கிழக்கு விவசாயிகள் சம்மேளனம் மற்றொரு பிரிவாகவும் கடந்த 27ஆம் திகதி முதல் உத்தியோகபூர்வமாக பிரிக்கப்பட்டது.

மேற்படி சம்மேளனம் இரு நிர்வாக அலகுகளாக பிரிக்கப்பட்டதையடுத்து விரைவில் பதிவு செய்யப்படவுள்ளது. இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக நவாலி வடக்கு கிராம அலுவலர் அ. தனபாலரத்தினம் கலந்துகொள்வார். (அ-5)

## பரு.மெ.பெ. உயர்தரப் பாடசாலையில் நவோதய வாரம் அனுஷ்டிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையின் நவோதய வாரம் கடந்த 3ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. சனிக்கிழமை பாடசாலைச் சமூகத்தின் சிரமதான நிகழ்வுகள் இடம்பெற்றன. இந் நவோதய வாரத்தின் மகுடவாசகம்,

சிறந்த கற்றல் கற்பித்தலை உறுதி செய்வோம் என்பதாகும்.

எதிர்வரும் 9 ஆம் திகதி இடம்பெறும் மாணவர் ஆக்க மதிப்பீட்டுடன் இந் நவோதய வாரம் பூர்த்தியடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-52)

## பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் பிராந்திய பயிற்சி நிலையத்தில் துணைவிரிவுரையாளராக கடமை புரிந்த எஸ். திவ்விய குமாரன் இவ்வருடம் முதல் பிரதம விரிவுரையாளராகவும்; மாவட்ட மேற்பார்வைப் பொது சுகாதாரப் பரிசோதகராகவும் பதவியுயர்வு பெற்றுள்ளார்.

யாழ் செய்திகள்

அத்துடன் யாழ் பொது சுகாதாரப்பரிசோதகர் சங்க உறுப்பினர்களான எஸ்.பிரணவன், ரி.தயாளன், ஜெயபாலன், ஆர். ஈஸ்வரன் ஆகியோர் சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர்களாகப் பதவியுயர்வு பெற்று முறையே யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள தாக சங்கச் செயலாளர் எஸ் இராஜதுரை தெரிவித்துள்ளார். (அ)

## இலவச கணனி கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி வடக்கில் அமைந்துள்ள சிற்றி இன்பமற்றிக் சென்ரர் நிறுவனத்தினர் மாணவர்களின் நலன் கருதி இலவசக் கணனி கற்றை நெறிகளை வழங்கி வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக 2008ஆம் ஆண்டுக்கான பிரிவு ஆரம்பிக்க தீர்மானித்ததற்கமைவாக இக் கற்றை நெறிக்கு அடுத்த கட்டமாகவும் 50 மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் விண் ணப்பிக்கலாம் எனவும் விண்ணப்பங்களை சிறுப்பிட்டி கிளையில் பெற்றுக்கொள்ளலாம் என சிற்றி இன்பமெற்றிக் நிறுவனம் அறிவித் துள்ளது.

மேலதிக விபரங்களுக்கு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும் தொ.இல.-021 4591765, 0602213414. (அ)

## பதவி மாற்றங்கள்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய கல்வி அபிவிருத்திக் பிரதிக்கல்விப்பணிப்பாளர் எஸ். உதய குமார் வலயக்கல்வி நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

வலய நிதி உதவியாளர் எஸ்.ஜெயவசீகரன் வலய அலுவலக உதவியாளராகவும் தட்டெழுத்தாளர் திருமதி ஜெ.சரஸ்வதி நிதியுதவியாளராகவும் நியமிக்கப்பட்டு பொறுப்பேற்றுள்ளனர். (ஓ-52)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் வைகாசிப் பெருவிழா

(பருத்தித்துறை)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வைகாசிப் பெருவிழா எதிர்வரும்16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை செல்வச்சந்நிதி முருகனுக்கு விசேட அபிஷேக பூசைகள் இடம்பெறும். அத்துடன் பேராசிரியர் அ. சண்முகதாஸின் சொற்பொழிவும். யாழ். இராமநாதன் கல்லூரி மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

மேலும் முன்பள்ளிகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல். வறுமைக் கோட்டிற்கு கீழ்வாழும் இளைஞர்களுக்குத் துவிச்சக்கர வண்டி கையளிப்பும் இடம்பெறுவதுடன் அறுபத்து மூவர் குருபூசையும் இடம்பெறும்.(ஓ-52)



புலோலி ப.நோ.கூ சங்க கோப்சிற்றி திறப்பு விழாவில் இயக்குநர் சபைத்தலைவர் பீ.ஆறுமுகநாதன், பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் ஆகியோர் உரையாற்றுவதையும் மக்கள் வங்கி முகாமையாளர் எம்.சிவநேசன் அமர்ந்திருப்பதையும் யாழ். கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் பி.சிவலிங்கம் கோப் சிற்றியை திறந்து வைத்து பொது முகாமையாளர் எஸ். வேல்முருகுவிடம் இருந்து பொருட்களை கொள்வனவு செய்வதையும் படங்களில் காணலாம்.

# தான்வீரிடம் தகர்ந்தது சென்னை அணி வோர்ன் அணிக்கு ஐந்தாவது வெற்றி




(ஜெய்ப்பூர்)

சொகைல் தான்வீரின் துல்லியமான வேகத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, ஷேன் வோர்ன் தலைமையிலான ராஜஸ் தான் றோயல்ஸ் அணியிடம் 8 விக்கெற்றுக் கள் வித்தியாசத்தில் மோசமாக வீழ்ந்தது.

இவ் வெற்றியுடன் தொடரில் 5 ஆவது வெற்றியைப் பெற்று முதலாவது இடத்திற்கு முன்னேறியது.

இந்திய பிரிமியர் லீக் தொடரில் நேற்று முன்தினம் இரவு ஜெய்ப்பூரில் நடைபெற்ற லீக் சுற்றின் 24ஆவது போட்டியில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சொகைல் தான்வீரின் துல்லியமான பந்துவீச்சில் சிக்கி 19 ஓவர்களில் சகல விக்கெற்றுக்களை யுமிழந்து 109 ஓட்டங்களை மாத்திரமெடுத்தது.

இதில் மோர்கல் 33 பந்துகளில் (4 பவுண் டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 42 ஓட்டங்களை யும் சுரேஷ் ரெய்னா 27 ஓட்டங்களையும் பத்ரிநாத் 15, நிற்னி 11 ஓட்டங்களை எடுத்தனர்.

பார்த்திப் பட்டேல், பிளமிங், ஜோகிந்தர் சர்மா மற்றும் முரளிதரன் ஆகியோர் ஓட்ட மெதனையும் எடுக்காமல் ஆட்டமிழந்ததுடன் அணித்தலைவர் தோனி ஒரு ஓட்டத்தை மாத் திரமெடுத்தார்.

பந்துவீச்சில் சொகைல் தான்வீர் 4 ஓவர் கள் பந்துவீசி 14 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 6 விக்கெற்றுக்களையும் முனாப் பட்டேல் 2 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 110 ஓட்டங் களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி; சிமித், அஸ்னோக்கரின் சிறப்பான துடுப்பாட்டத்தால் 14.2 ஓவர்களில் 2 விக் கெற்றுக்களை மாத்திரமிழந்து 110 ஓட்டங் களை எடுத்து 8 விக்கெற்றுக்களால் அபார வெற்றிபெற்றது.

இதில் சிமித் 35 ஓட்டங்களையும் அஸ் னோக்கர் 32 ஓட்டங்களையும் மற்றும் வோட் சன் 14 ஓட்டங்களையும் எடுத்தனர். உதிரி களாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 21 ஓட்டங்களை வழங்கியது.

இப் போட்டியின் நாயகனாக ராஜஸ்தான் அணியின் வெற்றிக்கு பெரும் திருப்பு முனையை ஏற்படுத்திய சொகைல் தான்வீர் தெரிவானார்.

இவ் வெற்றியுடன் ஐ.பி.எல்.தொடரில் ஷேன் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, தான் ஆடிய 5 ஆவது தொடர்ச்சியான வெற்றியாகும். இத் தோல்வி யுடன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தான் ஆடிய 6ஆவது ஆட்டத்தில் சந்திக்கும் 2 ஆவது தோல்வியாகும்.

தொடர்ச்சியாக 4 போட்டிகளில் வெற்றி பெற்று முன்னணியிலிருந்த தோனி தலை மையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முன்னதாக 5ஆவது ஆட்டத்தில் டில்லி அணியிடம் தோல்வியடைந்தமை குறிப்பிடத் தக்கது. (5)


## ஐ.பி.எல் தொடரில் தான்வீர் சாதனை

பாகிஸ்தான் அணி வீரரான 23 வய தான சொகைல் தான்வீர், கையை வளைத்து மிகவும் வித்தியாசமாக பந்து வீசுவார். ராஜஸ்தான் அணியின் வெற்றி நாயகனாக பிரகாசித்த தான்வீர் 4 ஓவர்கள் பந்துவீசி 14 ஓட்டங்களைக்கொடுத்து 6 விக்கெட்டக் களை வீழ்த்தினார்.

இதன் மூலம் ஐ.பி.எல் தொடரில் 5 விக் கெட்டுக்களுக்கு மேல் வீழ்த்தும் முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றார். தவிர இரு பது -20 கிரிக்கெட் வரலாற்றில் மிகச் சிறந்த பந்துவீச்சையும் பதிவு செய்தார். (5)

## இஷாந்த்துக்கு அபராதம்

(மும்பை)



ஐ.பி.எல் இருபது -20 விறுவிறுப்பாக நடக்கிறது. கடந்த சனிக் கிழமை மொ காலியில்நடந்த லீக் போட்டி யில் கிங்ஸ் லெவின் பஞ் சாப் அணியு டன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி மோதியது.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் இடம்பெற்றுள்ள இளம் வீரர் இஷாந்த், உணர்ச்சிவசப்பட்ட நிலையில் விக்கெட்டை காலால் எட்டி உதைத்தார்.

மைதானத்தில் உள்ள பொருட்களை தவறாக பயன்படுத்துவது அல்லது கையாள் வது சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி) நிலை ஒன்றின் கீழ் விதிமுறை மீறலாக கருதப்படுகிறது.

இதனை ஐ.பி.எல் அமைப்பும் முறை யாக பின்பற்றுகிறது.

போட்டி நடுவர் கிளைவ் லொய்ட் இத் தவறை சுட்டிக்காட்டியதால் இஷாந்த் சர்மா வின் சம்பளத்தில் இருந்து 10 சதவீதம் அபரா தமாக விதிக்கப்பட்டது. (5)

## 5 ஆண்டு தடை தற்காலிகமாக நீக்கம்

# ஐ.பி.எல். தொடரில் ஆடுகிறார் 'வேகப்புயல்' சொயிப் அக்தர்

(கராச்சி)

சொயிப் அக்தர் மீதான 5 ஆண்டுகள் தடை தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளது. இதனால் அவர் ஐ.பி.எல் ''இருபது-20'' தொடரில் ஆடுகிறார்.



பாகிஸ்தான் கிரிக்கெற் அணியின் முன் னணி வேகப்பந்து வீச்சாளர் சொயிப் அக்தர் கடிவாளம் இல்லாத குதிரை போல் செயல்படக் கூடியவர். பல சர்ச்சைகளில் சிக்கிய அக்தர் பாகிஸ்தான் கிரிக்கெற் சபையை சாடினார். இதனால் ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளான அக்தர் 5 ஆண்டுகள் விளையாட பாகிஸ்தான் கிரிக்கெற்சபை தடைவிதித்தது.

இந்தத் தடையை எதிர்த்து அக்தர் 3பேர் கொண்ட நடுவர் மன்றத்தில் மேல் முறையீடு செய்தார். இதனை விசாரித்த நடுவர் மன்றம் அக்தர் மீதான தடையை நீக்க மறுத்து விட்டது. ஆனால் அக்தர் வெளிநாடு களில் நடக்கும் போட்டியில் கலந்துகொண்டு ஆட லாம் என்று அறிவித்தது.

ஆனால் தடை நீக்கப்படாத பட்சத்தில் ஐ. பி.எல்.தொடரில் அக்தர் பங்கேற்க முடியாது என்று ஐ.பி.எல்.போட்டி நிர்வாகம் திட்டவட்ட மாக தெரிவித்துவிட்டது.

### தடை தற்காலிகமாக நீக்கம்

இதை தொடர்ந்து அக்தர் மீண்டும் நடுவர் மன்றத்தில் மேல் முறையீடு செய் தார். அதில் ஐ.பி.எல்.போட்டியில் தான் ஆட வசதியாக தன் மீதான தடையை நீக்க வேண் டும் என்று கூறியிருந்தார். நடுவர் மன்ற தலைவர் அப்தாப் பரூக் விசாரணை நடத்தினார்.

அக்தர் மேல் முறையீடு மனு மீது ஜூன் 4 ஆம் திகதி விசாரணை ஆரம்பமாகி நடை பெறுகிறது. அந்த விசாரணை தொடங்கும் வரை அக்தர் மீதான தடை தற்காலிகமாக நீக் கப்பட்டுள்ளதாக நடுவர் மன்றம் அறி வித்துள்ளது. இதனால் அக்தர் ஐ.பி.எல். போட்டியில் விளையாட முடியும்.

அக்தர் மீதான வழக்கு விசாரணை முடிய காலம் பிடிக்கும். அதற்குள் ஐ.பி.எல். போட்டியில் விளையாட விடாமல் தடுப்பது கூடுதல் அபராதம் என்று கருதுவதால் அவர் மீதான தடை தற்காலிகமாக நீக்கப் பட்டுள்ளது என்று நடுவர் மன்ற தலைவர் அப்தாப் பரூக் தெரிவித்தார்.

### அக்தர் இந்தியா வருகிறார்

தடைநீக்கம் குறித்து அக்தர் கருத்துத் தெரிவிக்கையில், ''இது எனக்கு மிகப் பெரிய நிம்மதியாகும். என் மீதான தடை முழு மையாக நீங்கி, நாட்டுக்காக மீண்டும் விளையாட வேண்டும் என்பது தான் எனது முக் கிய நோக்கமாகும். ஐ.பி.எல்.போட்டியில் விளை யாட ஆர்வமாக இருக்கிறேன்'' என்றார்.

ஐ.பி.எல்.போட்டி தலைவர் லலித் மோடி அக்தர் மீதான தடை நீக்கத்தை வரவேற்றுள் ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில், ''அக்தர் மீதான தடை நீக்கப்பட வேண்டும் அல்லது தற்காலிகமாக நீக்கப்படவேண்டும் அப்போது தான் ஐ.பி.எல். போட்டியில் விளையாட முடியும் என்பது எங்கள் நிபந் தனை. தடை தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ள தால் அக் தர் ஐ.பி.எல்.தொடரில் விளையாட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அவருடன் நாங்கள் பேசினோம். இன்னும் 2 நாட்களில் அவர் இந்தியா வருவார்'' என்று தெரிவித்தார்.

அக்தர் ரூ.1.70 கோடிக்கு கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளார். அவர் வருகையால் அந்த அணி நிர்வாகம் மகிழ்ச்சி அடைந்துள்ளது. (5)







காயம் முழுமையாக குணமடையாத நிலையில் சச்சின் டெண்டுல்கர் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியிலும் பங்கேற்கவில்லை. மைதானத்தில் அமர்ந்து போட்டியை கண்டுகளித்தார். மும்பை அணி வென்றவுடன் ஓடிவந்து வீரர்களை உற்சாகமாக பாராட்டி மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டபோது...

## ராஜஸ்தான் இராஜ்ஜியம்

வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணி தொடர்ந்து 5-வது வெற்றியைப் பெற்று முதலிடத்துக்கு முன்னேறியுள்ளது.

இத்தொடரில் ஒவ்வொரு அணியும் பெற்றுள்ள புள்ளிகளின் விபரம்,


| அணி | தலைவர் | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி | ஓட்டவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| ராஜஸ்தான் | வோர்ன் | 6 | 5 | 1 | 10 | +0.873 |
| டில்லி | சேவாக் | 6 | 4 | 2 | 8 | +0.761 |
| பஞ்சாப் | யுவராஜ் | 6 | 4 | 2 | 8 | +0.385 |
| சென்னை | தோனி | 6 | 4 | 2 | 8 | +0.176 |
| கொல்கத்தா | கங்குலி | 6 | 2 | 4 | 4 | +0.482 |
| மும்பை | டெண்டுல்கர் | 6 | 2 | 4 | 4 | -0.889 |
| பெங்களூர் | ராவிட் | 6 | 2 | 4 | 4 | -1.540 |
| டெக்கான் | லக்ஸ்மன் | 6 | 1 | 5 | 2 | -0.200 |

*குறிப்பு:*- நேற்று முன்தினமிரவு நடைபெற்ற சென்னை ராஜஸ்தான் அணிகள் மோதிய போட்டி வரையான முடிபுகளே...

# படகு கவிழ்ந்ததில் 15 பேர் பலி பிரேசில் நாட்டில் சம்பவம்

(சாபவுலா)

பிரேசில் நாட்டில் அமேசன் பகுதியில் சோலி மோஸ் நதியில் பயணிகள் படகு கவிழ்ந்ததில் 15 பேர் தண்ணீரில் மூழ்கிப் பலியானார்கள்.



சோலிமோஸ் ஆற்றின் நடுவே சென்ற போது திடீரென படகு கவிழ்ந்தது. இதில் பயணம் செய்த 80 பயணிகளும் தண்ணீரில் விழுந்து தத்தளித்தனர். அவர்களில் 15 பேர் தண்ணீரில் மூழ்கி பலியானார்கள்.

உடனடியாக மீட்பு பணிகள் நடந்தது. இதில் 15 பேர் உடலும் மீட்கப்பட்டது. நேற்று முன்தினம் இரவு மீட்புப்பணி நிறுத்தப்பட்டது. இதற்கிடையே அந்த படகில் 110 பேர் பய ணம் செய்ததாக தெரிய வந்துள்ளது. அவர் களில் 30 பேர் கதி என்ன ஆனது என்று தெரியவில்லை. அவர்கள் பலியாகி இருக்க லாம் என்று அஞ்சப்படுகிறது. மீண்டும் உடல் களைதேடும் பணிநடந்தது. 60 நீச்சல் வீரர்கள் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். (அ-5)

## இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையில் விரைவில் அமைதி உடன்பாடு ஏற்படலாம்

### அமெரிக்கா நம்பிக்கை

இஸ்ரேலியர்களுக்கும் பாலஸ்தீனர்களுக்கும் இடையே இந்த ஆண்டு முடிவுக்குள் அமைதி உடன்பாடு எட்ட வாய்ப்புள்ளது என்றே அமெரிக்கா கருதுகிறது என அமெரிக்க வெளியுறவு துறை செயலர் கொண்டலீஸா ரைஸ் கூறியுள்ளார்.

பாலஸ்தீன அதிபர் முகமது அப்பாஸ் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய பிறகு மேற்குக் கரையின் ரமல்லா நகரில் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

பாலஸ்தீன தேசத்தை உருவாக்க நேரம் கனிந்து விட்டது என்றே அதிபர் புஷ் இன்னமும் கருதுகிறார் என்றும் ஆனால், மேற்குக் கரைப் பகுதியில் தொடருகின்ற இஸ்ரேலியக் குடியிருப்பு வேலைகள் தான் பிரச்சினையாக உள்ளன என்றும் அவர் மேலும் கூறினார்.

அதிபர் புஷ் தமது ஆட்சிக்காலம் அடுத்த ஜனவரியில் முடிவதற்குள் அமைதி உடன்பாடு ஒன்று எட்டப்பட வேண்டும் என்பதில் ஆர்வமாக இருக்கிறார்.

ஆனால் அவர் கடந்த நவம்பரில் அனாப்போலிஸ் நகரத்தில் முன்னின்று நடத்திய பெரிய மத்திய கிழக்கு அமைதி மாநாட்டில் தொடங்கிய புதிய அமைதி முயற்சிகள் போதிய முன்னேற்றம் காணவில்லை என்றே கருதப்படுகிறது. (அ-5)


UNIVERSITY OF JAFFNA, SRILANKA

DIPLOMA IN PHYSICAL EDUCATION

ACADEMIC YEAR - 2006/2007

Applications are invited from those who wish to follow the **Diploma in Physical Education** course to be conducted by the University of Jaffna in the Academic year 2006/2007

Applicants should satisfy the requirements given below:

**Minimum Educational Qualifications:**

1. Should have passed in three subjcets in the G.C.E. (A/L) in one and thesame sitting .
2. Should have the minimum qualification required by the University Grants Commission for University admission in Sri Lanka.

**Selection:**

The selection will be based on the performance of the applicants in a written examination and practical assessment and oral examination conducted by the University . These examinations and assessment test will be held at the University of Jaffna, Thirunelvely.

**Note**: Preference will be given to those candidates who have participated in sports and athletics and won places at District and National Level.

**Age**: Should be in the age group 18-28 Years

The University Senate may relax the age requirement in the case of candidates who are already in the sports profession in Government and non Government Sectors.

**Duration** :Two years (internal -full Time)

**Course fee**: Rs, 24,000/=

Application forms could be obtained from the Assistant Registrar/Exams & Admissions Branch, University of Jaffna by submittng a payment receipt of Rs100 /= which could be paid at shroff`s counter of the University of Jaffna. Duly filled application forms should be submitted to the Assistant Registrar Exams & A dmissions Branch , University of Jaffna on or before 30.05.2008.

Registrar
05.05.2008


(C/1084)


# வேற்றுக் கிரகப் பெண்ணா? அல்லது ஆவியா? பறந்து செல்லும் உருவம் ஏற்படுத்திய பரபரப்பு

(மெக்சிகோசிட்டி)

பறந்து செல்லும் பெண் உருவம் ஒன்று மெக்சிகோ நாட்டில் படம் பிடிக்கப்பட்டுள்ளது. இதனால் வேற்று கிரகத்துப்பெண் பூமியில் நடமாடுவதாக பீதி ஏற்பட்டுள்ளது.

விஞ்ஞான உலகில் அவ்வப்போது ஏதாவது ஒரு பரபரப்பு ஏற்பட்டு அடங்கும். பறக்கும் தட்டு வந்து இறங்கியது என்பார்கள். வேற்று கிரகவாசிகள் பூமியில் வந்துவிட்டுப் போனார்கள் என்ற தகவலும் காட்டுத்தீயாக பரவுவது உண்டு.



சில மாதங்களுக்கு முன் செவ்வாய் கிரகத்தில் மனித உருவம் இருப்பது போன்ற படம் வெளியாகி பெரும் விவாதத்தை உருவாக்கியது. இதேபோல இப்போது பறக்கும் பெண் போன்ற ஒரு மர்ம உருவம் மெக்சிகோ நாட்டின் நியூவோ லியோன் மலைப்பகுதியில் நடமாடுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இரண்டு வருடங்களுக்கு முன்பு, 2006 ஆம் ஆண்டு மே மாதம் இதே போன்ற ஒரு செய்தி மெக்சிகோவில் பரவியது. வானில் அடையாளம் தெரியாத மர்மப் பொருட்களை படம் பிடிக்கும் விண்ணியல் ஆய்வாளர்கள் பலர் அப்போது மலைப்பகுதியில் தாவித் தாவி பறக்கும் பெண் உருவத்தைக் கண்டுள்ளனர்.

இந்த நிலையில், இரண்டு ஆண்டுகளுக்கு பின் அந்த பறக்கும் பெண் உருவம் நியூவோ லியோன் மலைப்பகுதியில் நடமாடியது உறுதி செய்யப்பட்டுள்ளது. மெக்சிகோ நாட்டின் பிரபல விண்ணியல் ஆய்வாளர் அன்னா லூசியா சிட் என்பவர் தலைமையிலான குழுவினர் இதை உறுதி செய்துள்ளனர். மேலும் இதற்கான வீடியோ பட ஆதாரங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இது குறித்து அன்னா லூசியா கூறியதாவது,

மலைப்பகுதியில் பறக்கும் உருவம் நடமாடுவது உண்மைதான். எங்களின் தொடர்ச்சியான ஆய்வு இதை உறுதிப்படுத்துகின்றது.

பறக்கும் அந்த உருவத்தை படம் பிடித்திருக்கிறோம். ஆனால் அதன் தோற்றம் தெளிவாகப் பதிவாக வில்லை. புகை போன்ற உருவம் மட் டுமே அதில் தெரிகிறது. அந்த உருவம் பெண் போன்ற தோற்றத்தில் காணப்படு கிறது. அந்த உரு வத்தை 40 பேருக்கும் அதிக மானவர்கள் கூட பார்க்கவில்லை

மேற்கண்டவாறு அவர்கூறுனார்.

அன்னா லூசியா தவிர ஜேரால்டோ கர்ஷா, லியானார்டோ சமானியகோ குடலூப் என்னும் இரண்டு பொலிஸ் அதிகாரிகளும் அந்தப் பறக்கும் பெண் உருவத்தை அப்போது நேரில் பார்த்துள்ளனர். இவர்கள் இருவருமே வெவ்வேறு நகரங்களில் பணிபுரிபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இருவரும் இப்போது வெளியிட்டுள்ள பேட்டிகளால்தான் பரபரப்பு ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மர்மஉருவம் பற்றி கர்ஷா வர்ணிக்கும் போது, சூனியக்காரி மாதிரியான தோற்றத்தில் அது இருந்தது. அந்த உருவம் தொப்பி அணிந்து துடைப்பக் குச்சியில் பறந்து சென்ற மாதிரி இருந்தது. நான் ரோந்து போகும் பகுதியில் ஒரு கல்லறைப்பக்கமாக 2 நேரம் அந்த மர்ம உருவத்தை பார்த்து இருக்கிறேன். பறக்கும் அந்த பெண் உருவம் தன் உருவத்தை மறைத் தது போன்ற தோற்றத்திலும் இருந்தது என்கிறார் திகிலுடன்.

இவராவது பரவாயில்லை. குடலூப் இன்னும் ஒரு படி மேலே போய் விட்டார். அவர் கூறும் போது எனது ரோந்து வாகனத்தில் சென்ற போது மரத்திலிருந்து அந்த உருவம் வண்டியின் முன்பக்கமாக எழுந்தது. வாகனத்தின் முன்பக்க கண்ணாடி மீது கையையும் வைத்தது. அதன்பிறகு எனக்கு என்ன நடந்தது என்பதே தெரியவில்லை. கண்விழித்துப் பார்த்த போது எனது ஆடைகள் கலைக்கப்பட்டு இருந்தது. பிறகு என்னை மீட்க மருத்துவ குழுவை உதவிக்கு அழைத்தேன். அந்த உருவம் பார்ப் பதற்கு ரொம்ப வினோதமாக இருந்தது. அதற்கு மிகப் பெரிய கண்களும் இருந்தன. உடல் நிறம் படு கறுப்பாக இருந்தது. அப்பப்பா... என்று குண்டைத் தூக்கிப்போடுகிறார்.

பொலிஸ் அதிகாரிகளும், விண்ணியல் ஆய்வாளர்களும் ஒரே நேரத்தில் இப்படிச் சொல்வதால் 2006 இல் பார்த்த அந்த பறக்கும் மர்ம பெண் வேறு கிரகத்தைச் சேர்ந்த வராக இருப் பாரோ? என்றும், இறந்து போன பெண்ணின் ஆவியாக கூட அது இருக்க லாம் என்றும் உலகம் முழுவதும் பரபரப்பு பரவியுள்ளது. (அ-5)

## பாரக் ஒபாமா நம்பிக்கை

(வோஷிங்டன்)



அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக தாம் போட்டியிடுவது உறுதி என்று பாரக் ஒபாமா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

எனினும், ஹிலாரி கிளின்டன் விலகும் வரையில் போட்டி நீடிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். வோஷிங்டனில் செய்தியாளர்கள் சந்திப் பின் போது பேசிய ஒபாமா, ஜனநாயகக் கட்சி வேட்பாளரை முடிவு செய்வதற்கான முதல் கட்ட வாக்குப்பதிவு முடியும் வரையிலோ அல்லது ஹிலாரி விலகும் வரையிலோ போட்டி தொடரும் என்றார்.

எனினும், ஜனநாயக கட்சியின் அதிபர் வேட்பாளர் தாம்தான் என ஒபாமா நம்பிக்கையுடன் கூறினார். (அ-5)

## அமெரிக்காவின் பயங்கரவாதிகள் பட்டியலில் இன்னமும் நெல்சன் மண்டேலாவின் பெயர்!

(வோஷிங்டன்)

அமெரிக்க பயங்கரவாதிகள் பட்டியலில் தென்னாபிரிக்க தலைவர் நெல்சன் மண்டேலாவின் பெயர் தொடர்ந்து இருந்து வருகிறது. இதனால் அவர் அமெரிக்கா செல்வது என்றால் சிறப்பு அனுமதி பெறவேண்டிய நிலை உள்ளது.

தென்னாபிரிக்கா இப்போது ஒரு ஜனநாயக நாடு. தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி அந்த நாட்டில் ஆளும் கட்சியாக இருக்கிறது. இந்தநாடு சில ஆண்டுகளுக்கு முன்பு வரை நிறவெறி பிடித்த வெள்ளைக் காரர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. ஆட்சியாளர்கள் கறுப்பர்களை அடக்கி ஒடுக்கி வந்தனர். இந்த நிற வெறி ஆட்சிக்கு எதிராக போராடியவர் தான் நெல்சன் மண்டேலா. இவர் இதற்காக கைது செய்யப்பட்டு நீண்டகாலம் சிறையில் இருந்தவர்.

இவரை நிறவெறி தென்னாபிரிக்க அரசு பயங்கரவாதியாக சித்தரித்து இருந்தது. இதை ஏற்று அமெரிக்காவும் இவரை பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்த்தது.

நிறவெறி ஆட்சி முடிந்து தென்னாபிரிக்காவின் பெரும்பான்மை இன மக்கள் ஆட்சி அங்கு ஏற்பட்டது. அந்த அரசின் முதல் அதிபராக நெல்சன் மண்டேலா பதவியில் இருந்து ஓய்வும் பெற்றுவிட்டார். இன்னும் அவரது பெயர் அமெரிக்காவின் பயங்கரவாதிகள் பட்டியலில் தொடர்ந்து நீடிப்பதால் அவரும் அவரது கட்சிப் பிரமுகர்களும் அமெரிக்கா செல்ல வேண்டுமானால் சிறப்பு அனுமதி பெறவேண்டும் என்ற நிலை உள்ளது. தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் பெயர் இன்னும் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் இடம் பெற்று இருப்பது தர்மசங்கடமாக இருக்கிறது என்று அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் கொண்டலீசா ரைஸ் கூறு இருக்கிறார்.

### உலக தரிசனம்

தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர்களின் பெயர்களை பயங்கரவாதிகள் பட்டியலில் இருந்து நீக்குவதற்காக ஹோவர்ட் பெர்மன் ஒரு தீர்மானத்தை கொண்டு வர இருக்கிறார். அது நிறைவேறுமானால் நெல்சன் மண்டேலாவின் பெயர் பயங்கரவாதிகள் பட்டியலில் இருந்து நீக்கப்படும்.

மண்டேலாவின் 90 ஆவது பிறந்தநாள் எதிர்வரும் ஜுலை 18 ஆம்திகதி வருகிறது. அதற்கு முன்பு அவர் பெயர் நீக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-5)

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளின் கழிவறைகள், பிரேத அறைகள் மற்றும் அலுவலகங்களைச் சுத்திகரிப்பதற்கும் நோயாளர்களைக் காவுதல் மற்றும் நோயாளர் காவு வண்டி உதவியாளர் போன்ற கடமைகளை ஆற்றுவதற்கும் பொருத்தமான

## சுகாதாரத் தொழிலாளர்கள் ஆட்சேர்ப்பு -2008

**01.கடமைகள்**

01. வைத்தியசாலைக் கழிவறைகள் மற்றும் பிரேத அறைகளைச் சுத்திகரித்தல்.
02. பிரேத அறை மற்றும் பிரேத பரிசோதனை சம்பந்தப்பட்ட கடமைகள்.
03. ஆண் நோயாளிகளுடன் நோயாளர் காவு வண்டியில் உதவியாளராகச் செல்லல்.
04. வெளிநோயாளர் பிரிவு, சத்திர சிகிச்சைகூடம் மற்றும் வாட்டுகளில் நோயாளர்களை காவும் கடமைகள்.
05. தேவை ஏற்படின் வைத்தியசாலைக் காவற் கடமை மற்றும் துவிச்சக்கர வண்டி ஏவலாளர் கடமைகள்.

**02.தகைமைகள்**

01. விண்ணப்பிக்கும் கடமை நிலையம் (பிராந்திய சுகாதாரத் திணைக்களம், வைத்தியசாலை) அமைந்துள்ள மாவட்டத்தில் 5 வருடங்கள் விண்ணப்பத் திகதிக்கு முன்னராக தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.
02. 8ஆம் வகுப்பில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்(அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைச் சான்றிதழ் வேண்டப்படும்).
03. வயதெல்லை விண்ணப்பத் திகதியன்று 18 வயதினைப் பூர்த்தி செய்தவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல்வேண்டும்.
04. நன்நடத்தை உள்ளவர்களாக இருத்தல்வேண்டும்.

**03. ஆட்சேர்ப்பு முறை**

01. மேற்கூறப்பட்ட கடமையுடன் சம்பந்தப்பட்ட செய்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையுடன் கூடிய தெரிவு முறையாகும்.
02. எல்லா மாவட்டங்களில் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப செய்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் அமைய சுகாதாரத் தொழிலாளியாக நியமனம் வழங்கப்படும்.
03. ஏற்கனவே சுகாதாரத் தொண்டராக கடமையாற்றியவர்களின் சேவைக்காலமும் புள்ளி வழங்கலின் போது கவனத்தில் கொள்ளப்படும்.(2005 செப்ரம்பரில் ஆகக் குறைந்தது 7வருடங்கள் தொண்டராக கடமை புரிந்திருந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்)
04. ஆரம்பகாலத்தில் அமைய சுகாதாரத் தொழிலாளியாக நியமிக்கப்பட்டு சேவை திருப்திகரமாகவும் சிறப்பாகவும் காணப்படின் மட்டுமே 6 மாதங்களின் பின்னர் உரிய மேற்பார்வை அலுவலரால் சிபார்சு செய்யப்படுமிடத்து சேவை நிரந்தரமாக்கப்படும்.
05. அமைய அடிப்படையில் நியமனம் பெறும் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கான கொடுப்பனவு பொது நிர்வாகச் சுற்றுநிரூபம் 6/2006 இன் பிரகாரம் வழங்கப்படும்.

**04.விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பங்களை இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக A4 அளவிலான (21x29 cm) தாளினைப் பயன்படுத்தி தயாரிக்கவும். பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் 21.05.2008ஆம் திகதிக்கு முன்னர் 572/3 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் "சுத்திகரிப்பு தொழிலாளருக்கான ஆட்சேர்ப்பு விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பதாரிகளில் 5 வருடங்கள் யாழ்.மாவட்டத்தில் வசித்தவர்கள் தமது விண்ணப்பங்களை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கவும். நேரடியாக சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பி வைக்கவும்.

வைத்தியகலாநிதி எஸ்.குமாரவேற்பிள்ளை,
செயலாளர்,
சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு,
வடமாகாணம்.

(C/1087)

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளின் கழிவறைகள், பிரேத ஆறைகள் மற்றும் அலுவலகங்களைச் சுத்திகரிப்பதற்கும் நோயாளர்களைக் காவுதல் மற்றும் நோயாளர் காவு வண்டி உதவியாளர் போன்ற கடமைகளை ஆற்றுவதற்கும் பொருத்தமான

## சுகாதாரத் தொழிலாளர்கள் ஆட்சேர்ப்பு -2008

1. முதல் எழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர்: திரு/திருமதி/ செல்வி:-
   தமிழில் :- ..........
   ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):- ..........
2. முதல் எழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்:-
   தமிழில் :- ..........
   ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):- ..........
3. தபால் முகவரி:-
   தமிழில் :- ..........
   ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):- ..........
   நிரந்தர வதிவிடம் :- ..........

04. விண்ணப்பிக்கும் இடம் :- ..........

05. பால் :- ஆண் (M) / பெண் (F) [ ]

06. பிறந்த திகதி
    15.04.2008ஆம் திகதியன்று வயது [ வருடம்: மாதம்: திகதி: ]

07. அடையாள அட்டை இலக்கம் : [ | | | | | | | | | ]

08. இனம்: சிங்களவர் [ ] இலங்கைத்தமிழர் [ ] இந்தியத்தமிழர் [ ]
    முஸ்லிம் [ ] ஏனையவர் [ ]

09. (I) நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம்:- ..........
    (II) பிரதேச செயலாளர் பிரிவு :- .......... கிராம சேவகர் பிரிவு:- ..........
    (III) வதியும் கால எல்லை:- .......... தொடக்கம் .......... வரை

**10. விண்ணப்பதாரியின் உறுதியுரை**

1. பத்திரிகை விளம்பரத்தில் கூறப்பட்ட கடமைகளையும், உயர் அதிகாரிகளினால் பணிக்கப்படும் ஏனைய கடமைகளையும் செய்வதற்கு பூரண சம்மதம் தெரிவித்துக் கொள்கிறேன்.
2. இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விண்ணப்பங்கள் யாவும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனும் ஒரு பகுதி பூர்த்தி செய்யப்படாமையினாலோ அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாக சேர்க்கப்பட்டுள்ளதன் விளைவாகவோ ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன்.
   மேலும் இதில் உள்ள சகல பிரிவுகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகிறேன்.
3. என்னால் தரப்பட்ட விடயங்கள் பொய்யானவை என தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும் நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் உள்ளாவேன் என்பதை நான் அறிவேன்.
4. பரீட்சை தொடர்பான நிபந்தனைகள் அனைத்திற்கும் அமைந்தொழுக நான் உடன்படுகின்றேன்.

திகதி :- .......... ..........
விண்ணப்பதாரியின் கையொப்பம்

# அறுவைச் சிகிச்சையின்றி சிறுநீரகக் கற்கள் உருவாவதைத் தடுக்கும் புதிய பக்டீரியா

## -அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

பொதுவாக ஆண்களுக்கு வரும் நோய்களில் சிறுநீரகக் கற்களால் ஏற்படும் பாதிப்பு மிகவும் கடுமையானதாக இருக்கிறது.

உடலில் கடும் வலியை ஏற்படுத்தக் கூடிய இந்த சிறுநீரகக் கற்களை அறுவைச் சிகிச்சை மூலம் மட்டுமே முழுமையாக அகற்ற முடியும் என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.


சிறுநீரில் உள்ள கழிவுப் பொருட்களால் சிறுநீரகக் கற்கள் தோன்றுகின்றன. சிறுநீரகக் கற்கள் ஒரு முறை உருவாகிவிட்டால் சிறுநீர் பாதையின் மற்ற பகுதிகளுக்கு அது சென்றுவிடுகிறது.

சிறுநீர் வெளியேறுவதை சிறிது சிறிதாகத் தடுக்கும் இந்தக் கற்கள், கடும் வலியையும் தொற்று நோயையும் ஏற்படுத்துகின்றன.

இறுதியில், சிறுநீரகங்கள் பழுதடைவதற்கும் சிறுநீர்க் கற்கள் வழிவகுக்கின்றன. சிறுநீரகக் கற்களில் 80 சதவீதக் கற்கள் கல்சியம் ஒக்ஸலேட் எனப்படும் கூட்டுப் பொருளால் உருவாகிறது.

தற்போது அமெரிக்காவின் பாஸ்டன் பல்கலைக்கழக விஞ்ஞா னிகள் சிறுநீரகக் கற்கள் மீண்டும் உருவாவதைத் தடுக்க அறுவைச் சிகிச்சை இல்லாத புதிய மருத்துவ முறை ஒன்றைக் கண்டுபிடித்துள் ளனர்.

அதன்படி, சிறுதுகள் முதல் பெரிய முத்து போன்ற அளவிலான் சிறுநீரக கற்கள் உருவாவதை பக்டீரியா ஒன்றின் மூலம் தடுக்க முடியும் என அவர்கள் நிரூபித்துள்ளனர்.



Oxalobacter formigenes - என்ற பக்டீரியா சிறுநீரகக் கற்கள் மீண்டும் உருவாவதை 70சதவீதம் அள விற்கு குறைப்பதாக "ஜேர்னல் ஆஃப் அமெரிக் கன்சொசைட்டி ஆஃப் நெப் ரோலஜி" என்ற பத்திரிகையில் வெளியாகியுள்ள செய்தியில் தெரி விக்கப் பட்டுள்ளது.

பெரும்பாலான ஆண்களின் சிறுநீர் பாதையில் உருவாகும் கல்சியம் ஒக்ஸ லேட்டை Oxaloba cter formigenes என்ற இந்த பக்டீரியா உடைத்துவிடுகிறது.

"சிறுநீரகக் கற்கள் தோன்றுவதற்கு காரணமாக இருக்கும் கல்சியம் ஒக்ஸலேட்டுகள் மீண்டும் உருவாவதை இந்த பக்டீரியா 70 சதவீதம் குறைத்துவிடுகிறது" என இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானியான டேவிட் காஃப்மேன் தெரிவிக்கிறார். "எங்களு டைய கண்டுபிடிப்பு மருத்துவத்துறையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியது.

சிறுநீரகக் கற்கள் மீண்டும் உருவாவதைத் தடுக்க அறுவைச் சிகிச்சைக்கு பதிலாக Oxalobacter formigenes- பக்டீரி யாவை பயன்படுத்துவது ஆரம்பகட்ட பரிசோதனை யில் இருக்கிறது" என்றும் காப்மேன் தெரி வித்துள்ளார்.

அதனால், இந்த சிகிச்சை முறை செயற்பாட்டுக்கு வர இன்னும் சிறிது காலம் பிடிக்கும் எனத் தெரிகிறது.




## இரும்புச் சத்து குறைவான பெண்கள் எளிதில் நோயாளராகும் வாய்ப்பு



பெண்களை அதிக அளவில் பாதிக்கும் பிரச்சி னைகளுள் முக்கி யமானதாக இரத்த சோகை உள்ளது.

தெற்காசியா வில் 45 சதவீதம் நகரத்துப் பெண்களும். 54 சத வீதம் கிராமப்புற பெண்களும் இரத்த சோகை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. நேஷனல் இன்ஸ்ரிரியூட் ஓவ் நியூட்ரிஷன் என்ற நிறுவ னம் நடத்திய ஆய்வில், இந்தியப் பெண்களில் 15 வயது முதல் 49 வயது வரை உள்ளவர்கள் இரும் புச் சத்துக் குறைவினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரும்புச்சத்து தான் நமது உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியினைத் தருகிறது. இரும்புச் சத்துக் குறைவாக உள்ள பெண்க ளுக்கு எளிதில் நோய் வருவதற்கான வாய்ப் புகள் மிகவும் அதிகம். உடலில் இரும்புச் சத்து குறைந்தால் ஒட்சிசனின் அளவும் குறைந்துவிடும். இறைச்சி, ஈரல், பச்சைக் காய் கறி வகைகளில் 2 முதல் 5 சதவீதம் இரும் புச் சத்து உள்ளது.

# தீவகக் கல்வி வலயத்தின் க.பொ.த (சா/த) 2007 பெறுபேறுகள்



பேராசிரியர்
பொ.பாலசுந்தரம்பிள்ளை(Ph.D.Durham)
முன்னாள் துணைவேந்தர்

தீவகக்கல்வி வலயத்திலுள்ள மூன்று கல்விக்கோட்டங்களில் 50 பாடசாலைகள் செயல்படுகின்றன. மேலும் 26 பாடசாலைகள் ( ஊர்காவற்றுறைக் கோட்டம் 10, வேலணைக் கோட்டம் 14, நெடுந்தீவுக் கோட்டம் 02) இவ் வலயத்தில் இயங்காமல் உள்ளன. இயங்கும் 50 பாடசாலைகளுள் 30 பாடசாலைகள் க.பொ.த (சா/த) பரீட்சைக்கு மாணவர்களைத் தோற்ற வைத்தன. 2007 இல் முதல் தடவையாக 576பேர் விண்ணப்பித்து 548பேர் பரீட்சைஎழுதி 192பேர் (35.03%) க.பொ.த (உ/த) வகுப்பு கற்கத் தகுதி பெற்றுள்ளனர். அட்டவணை 1 இல் 2001 இல் இருந்து தீவகக் கல்வி வலயத்தில் க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களினதும் சித்திபெற்ற மாணவர்களினதும் எண்ணிக்கையும், சித்தி விகித மும் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை I**

| ஆண்டு | தோற்றியவர்கள் எண்ணிக்கை | சித்திபெற்றவர்கள் எண்ணிக்கை | சித்தி விகிதம் |
|---|---|---|---|
| 2001 | 575 | 193 | 33.57 |
| 2002 | 536 | 159 | 29.66 |
| 2003 | 737 | 182 | 24.69 |
| 2004 | 686 | 180 | 26.24 |
| 2005 | 713 | 180 | 25.24 |
| 2006 | 567 | 194 | 34.22 |
| 2007 | 548 | 192 | 35.10 |

யாழ்ப்பாண மாவட்ட புள்ளிவிபரக் கை நூல்-2006/2007 பரீட்சைமுடிவுகள் கணிதத்துடனும், கணிதசித்தியில்லாமலும் ஆறு பாடங்களிலும், அதற்கு மேலும் 313 பேர் சித்தி (57.11 ) பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. கணிதத்தில் சித்தி பெறாததால் குறிப்பிடத்தக்க மாணவர்களின் க.பொ.த (உ/த) கல்வி பெரிதும் பாதிக்கப்படுகின்றது. மேலும் 5 பாடங்களில் சித்தி பெற்று கணிதத்தில் சித்தி பெறாத மாணவர்கள் இருப்பதும் குறிப்பி டத் தக்கது.

தீவகக்கல்வி வலயத்தில் க.பொ.த (உ/த) 2007 பரீட்சையில் மாணவர்களின் பாடரீதியான அடைவுகள் பின்வருமாறு.

**அட்டவணை II**

| பாடம் | தோற்றிய மாணவர்கள் | தரம் A | B | C | S | W | சித்தி % |
|---|---|---|---|---|---|---|---|
| இந்துசமயம் | 421 | 104 | 66 | 105 | 102 | 44 | 89.54 |
| உரோமன் கத்தோலிக்கம் | 123 | 42 | 36 | 27 | 17 | 01 | 99.67 |
| கிறிஸ்தவம் | 02 | 01 | 01 | - | - | - | 100 |
| இஸ்லாம் | 02 | - | - | 01 | - | - | 50 |
| தமிழ்மொழியும் இலக்கியமும் | 545 | 29 | 50 | 129 | 200 | 137 | 74.86 |
| ஆங்கிலம் | 547 | 03 | 00 | 12 | 55 | 477 | 12.79 |
| விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | 546 | 06 | 17 | 50 | 100 | 373 | 31.68 |
| கணிதம் | 547 | 24 | 27 | 51 | 119 | 326 | 40.22 |
| சமூகக்கல்வியும் வரலாறும் | 545 | 29 | 55 | 97 | 187 | 177 | 65.69 |
| சித்திரம் | 151 | 01 | 02 | 08 | 53 | 87 | 73.56 |
| சங்கீதம் | 341 | 47 | 49 | 57 | 72 | 116 | 65.98 |
| நடனம் | 49 | 18 | 07 | 14 | 03 | 07 | 85.71 |
| ஆங்கில இலக்கியம் | 01 | - | -- | - | - | - | 100 |
| தமிழ் இலக்கியம் | 402 | 15 | 23 | 50 | 102 | 212 | 47.26 |
| புவியியல் | 114 | 03 | 07 | 26 | 45 | 33 | 71.05 |
| அபிவிருத்திக் கற்கை | 121 | 02 | 06 | 15 | 57 | 41 | 66.11 |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 341 | 18 | 50 | 87 | 123 | 63 | 81.52 |
| விவசாயம் | 214 | 02 | 09 | 40 | 79 | 84 | 60.70 |
| மனைவிஞ்ஞானம் | 110 | 01 | 04 | 12 | 50 | 43 | 60.90 |
| வர்த்தகமும் கணக்கியலும் | 174 | 07 | 05 | 28 | 51 | 80 | 53.21 |
| தகவல் தொழில்நுட்பம் | 17 | 0 | 01 | 08 | 05 | 03 | 82.35 |
| மீன்பிடியியல் | 20 | - | 02 | 15 | 03 | - | 100 |
| | 5333 | 352 | 417 | 832 | 1423 | 2304 | 66.95 |

548 மாணவர்கள் மொத்தமாக 5330 பாட அலகுகளுக்குத் தோற்றினார்கள்-இவ் வலகுகளில் A சித்தி352(6.6%), B சித்தி 417 (7.8%), C சித்தி 833 (15.6%) S சித்தி 1423 (26.7%) W மட்டம் 2305 (43.3%)

பிரதான ஆறு பாடங்களுள் சமய பாடத்தில் மாணவர்களின் அடைவு திருப்தியாகும்-தமிழ்மொழியும் இலக்கியத்தில் 74.86% சித்தியும், சமூகக்கல்வியும் வரலாற்றில் 65.9% சித்தியும் போதுமானதாக இல்லையாயினும் ஓரளவு திருப்தியடையலாம். எனினும் மற்றைய மூன்று பாடங்களில் ஆங்கிலம் (12.87%), விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (31.68%), கணிதம் (40.22%) அடைவுகள் மிகக் குறைவாக இருக்கின்றன. இப் பாடங்களில் மாணவர் களின் அடைவுக் குறைவு அவர்களது உயர் கல்வி, வேலைவாய்ப்புக்களை பெரிதும் பாதித் துள்ளது.

தேர்வுப் பாடங்களில் பெறுபேறுகள் ஓரளவு திருப்திகரமாக இருக்கின்றன. சங்கீத பாடத்தில் பெறுபேறுகள் சிறப்பாக இருக்கின்ற தெனலாம். இதில் A 47, B 49, C 72 சித்திகள் இருப்பது குறிப்பிடத்தக்கன. புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தில் 6 மாணவிகள் சங்கீதத்தை எடுத்து இருவர் A சித்தியும், நால்வர் B சித்தியும் பெற்றுள்ளனர். இதேபோல் புனித அந்தோனியார் கல்லூரி (A5, B 7, C3 ,S5, W1) நயினாதீவு கணேச வித்தியாலயம் (A5, B4, C4, S7 ,W2) நயினாதீவுமகாவித்திியலம் (A3,B4,C4,S1,W1) ஆகியனவற்றின் சங்கீத பெறுபேறுகள் மகிழ்ச்சி தருவதாக அமைந்துள்ளன-தேர்வு பாடங்களில் தமிழ் இலக்கியம் (47.26%), வர்த் தகமும் கணக்கியலும் (53.21%) பெறுபேறுகள் திருப்திகரமானதாக இல்லை.

புனித அந்தோனியார் கல்லூரியில் கடல் நீர் உயிர் வள தொழில்நுட்பத்திற்கு (மீன்பிடியியல்) தோற்றிய 20 மாணவர்கள் யாவரும் சித்தி பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது. மாணவர்களின் உயர்கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றை கணிதம், விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் பெரும் செல்வாககு செலுத் துவதால் இப் பாடங்களில் மாணவர்களின் அடைவு பாடசாலை அடிப்படையில் நோக்கப்படுகின்றன.

கணித பாடத்தில் நான்கு பிரதான கல்லூரிகள் யாழ்ற்றன் கல்லூரி (70.27%), வேலணை மத்திய கல்லூரி (66.07%), கலாநிதி தியாகராசா மகா வித்தியாலயம் (64.8%) , புனித அந்தோனியார் கல்லூரி (61.76%) கூடிய எண்ணிக்கையான மாணவர்களை பரீட்சைக்கு அனுப்பியும், திருப்திகரமான பெறுபேறுகளைப் பெற்றிருக்கின்றதெனலாம். காரைதீவு சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயப் பெறுபேறுகள் மாணவர்களின் எண்ணிக்கையை கருத்திற்கொள்ளும்போது சித்தி விகிதங்கள் மிகவும் கவலையளிப்பதாக இருக்கின்றன. குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளின் பெறுபேறுகள் திருப்தி தருவதாக இல்லை. இரு பாடசாலைகளில் ஒரு மாணவரும் சித்தியடையவில்லை என்பது கவலைக்குரியது.

## ஒரு பார்வை

**அட்டவணை III**

| பாடசாலைகள் | கணிதம் தோற்.எண்ணி | A | B | C | S | W | சித்தி % | விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் தோற்.எண்ணி | A | B | C | S | W | சித்தி % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ற்றன் கல்லூரி | 37 | 06 | 02 | 09 | 09 | 11 | 70.27 | 37 | 02 | 04 | 08 | 09 | 14 | 62.16 |
| வியாவில் சைவ வித்தியாலயம் | 02 | - | - | - | - | 02 | 00 | 02 | - | - | - | 01 | 01 | 50 |
| கலாநிதி தியாகராசா மகா வித்தி. | 54 | 06 | 04 | 14 | 11 | 19 | 64.8 | 54 | 01 | 01 | 13 | 12 | 27 | 50 |
| சுந்தரமூர்த்திநாயனார் வித்தி. | 30 | - | 02 | 01 | 05 | 22 | 26.66 | 30 | - | 01 | - | 01 | 28 | 6.66 |
| வேலணை சைவப்பிரகாச வித்தி. | 08 | - | - | 01 | 03 | 04 | 25.0 | 08 | - | - | - | 02 | 06 | 25.0 |
| நாரந்தனை கணேஷா வித்தி. | 05 | - | - | 01 | - | 04 | 20.00 | 05 | - | - | - | 01 | 04 | 20.0 |
| வேலணை கிழக்கு மகா வித்தி. | 10 | - | - | 01 | - | 09 | 10 | 10 | - | - | 01 | 01 | 08 | 20 |
| வேலணை சரஸ்வதி வித்தி. | 04 | - | - | - | - | 04 | 0 | 04 | - | - | - | 01 | 03 | 25 |
| வேலணை மேற்கு நடராசா வித்தி. | 15 | 02 | 01 | 01 | 03 | 08 | 46.66 | 15 | - | 02 | - | 03 | 10 | 33.33 |
| வேலணை மத்திய கல்லூரி | 56 | 04 | 07 | 07 | 19 | 19 | 66.07 | 56 | 02 | 01 | 10 | 17 | 26 | 53.57 |
| சரவணை நாகேஸ்வரி வித்தி. | 12 | - | - | 01 | 01 | 10 | 16.66 | 12 | - | - | - | 01 | 11 | 8.33 |
| அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி. | 18 | - | 02 | 01 | 03 | 10 | 11.11 | 18 | - | 01 | 01 | 02 | 14 | 22.22 |
| நாரந்தனை RCT வித்தி. | 13 | 01 | - | - | 03 | 09 | 30.76 | 13 | - | - | 01 | 03 | 09 | 30.76 |
| ஊர்காவற்றுறை புனித மேரி வித்தி. | 22 | 01 | 03 | 01 | 06 | 11 | 50 | 22 | - | 02 | 02 | 03 | 15 | 31.81 |
| கரம்பன் சண்முகநாத வித்தி. | 07 | - | - | - | 01 | 06 | 14.28 | 07 | - | - | - | - | 07 | 0.0 |
| கரம்பன் சிறியபுஸ்பம் மகா வித்தி. | 13 | - | - | - | 04 | 09 | 30.76 | 13 | - | - | - | 02 | 11 | 18.18 |
| புனித அந்தோனியார் கல்லூரி | 34 | 01 | 05 | 02 | 13 | 13 | 61.76 | 34 | - | 04 | 08 | 13 | 09 | 73.52 |
| புங்குடுதீவு மகா வித்தி. | 21 | - | - | 03 | 03 | 15 | 28.57 | 21 | - | - | - | 05 | 16 | 23.80 |
| புங்குடுதீவு ஸ்ரீகணேஷா வித்தி. | 12 | - | - | 01 | 01 | 10 | 16.6 | 12 | - | - | - | - | 12 | 0.0 |
| புங்குடுதீவு கமலாம்பிகை வித்தி. | 6 | 01 | - | - | 02 | 03 | 50 | 6 | - | - | 01 | - | 05 | 16.66 |
| புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் வித்தி. | 8 | - | - | - | - | 08 | 0.30 | 8 | - | - | - | - | 08 | 0.0 |
| புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணியம் வித்தி. | 12 | - | - | - | 01 | 11 | 8.33 | 12 | - | - | - | - | 12 | 0.0 |
| எழுவைதீவு முருகவேள் வித்தி. | 01 | - | - | - | 01 | - | 100 | 01 | - | - | - | 01 | - | 100 |
| மண்டைதீவு மகா வித்தி. | 09 | - | - | - | 02 | 07 | 22.22 | 09 | - | - | 01 | 03 | 05 | 44.44 |
| அனலைதீவு சதாசிவ மகா வித்தி. | 40 | - | - | 01 | 05 | 34 | 15.0 | 40 | - | - | - | 05 | 35 | 12.05 |
| நயினாதீவு கணேஷா வித்தி. | 31 | 02 | 02 | 03 | 09 | 15 | 51.61 | 31 | 01 | - | 02 | 04 | 24 | 22.58 |
| நயினாதீவு மகா வித்தி. | 16 | - | 01 | - | 05 | 10 | 37.5 | 16 | - | - | - | 02 | 14 | 12.50 |
| நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி. | 14 | - | - | 02 | 03 | 09 | 37.51 | 14 | - | - | 03 | 02 | 09 | 35.71 |
| நெடுந்தீவு மகா வித்தி. | 24 | - | - | 01 | 07 | 16 | 33.33 | 24 | - | - | - | 01 | 23 | 4.16 |
| நெடுந்தீவு RC பெண்கள் வித்தி. | 12 | - | - | 03 | 01 | 08 | 33.33 | 12 | - | 01 | 01 | 03 | 07 | 41.66 |
| | 546 | 24 | 29 | 54 | 121 | 316 | 32.64 | 546 | 06 | 17 | 52 | 98 | 373 | 55.63 |

விஞ்ஞான தொழில்நுட்ப பாட அடைவு கணித அடைவைப் போல நான்கு பிரதான கல்லூரிகளான புனித அந்தோனியார் கல்லூரி (73.52%), யாழ்ற்றன் கல்லூரி (62.16%), வேலணை மத்திய கல்லூரி (53.57%) , கலாநிதி தியாகராசா மகா வித்தியாலயம் (50%) அடைவுகளைப் பெற்றுள்ளன. காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயம், அனலைதீவு சதாசிவ வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளின் பெறுபேறுகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. நான்கு பாடசாலைகளில் விஞ்ஞான பாடத்தில் ஒருவரும் சித்திபெறவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

புங்குடுதீவிலுள்ள 5 பாடசாலைகளில் விஞ்ஞானப் பெறுபேறுகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. தீவகக் கல்வி கோட்டத்தில் கணிதம், விஞ்ஞான பாடங்களில் மாணவர் கள் அடைவு மிகக் குறைவாக இருப்பதுடன் உயர் தரப் பெறுபேறுகள் மிகக் குறைவாகவுள் ளன. விஞ்ஞானத்தில் 456 பேர் பரீட்சைக்கு தோற்றி 6 மாணவர்களே A சித்திபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. சித்திபெற்ற மாணவர்களில் கூடிய விகிதத்தினர் சாதாரண S சித்தி பெற்றே பரீட்சையில் சித்திபெறுவதைக் காண முடிகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருக்கும் 5 கல்வி வலயங்களுள் தீவகக் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துச்செல்வதில் ஏனைய வலயங்களை விடக் கூடுதலான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது. இவ் வலயம் உள்ளடக்கியிருக்கின்ற 8 தீவுகளின் இயற்கை அமைப்பும், போக்குவரத்தும் கல்வி வளர்ச்சிக்கு சாதகமற்ற நிலைமையை ஏற்படுத் தியிருந்தன. எனினும், தீவுப் பகுதி முன்னோடி தமிழாசிரியர்களின் கடின முயற்சியால் 1991 தீவக இடப்பெயர்வுக்கு முன்னர் நன்னிலையில் விளங்கியது குறிப்பிடத்தக்கது. 1991 இல் புங்குடுதீவு, காரைநகர், வேலணை, மண்டைதீவு ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட இடப்பெயர்வும், 1991-1996 க்கு இடைப்பட்ட 5 வருட காலப் பகுதியில் இப் பகுதிகள் மக்கள் அற்று விளங்கியமையும், கல்வி வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு, எழுவைதீவு ஆகிய பகுதிகளில் பெரியளவு இடப்பெயர்வு ஏற்படாத போதும் குடிசன இடப்பெயர்வால் மக்கள் தொகை, குறிப்பாக வசதியான, மத்தியதர வகுப்பினரின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. மேற்குறிப்பிட்ட எட்டுத் தீவுகளில் 1981 இல் 81602 பேர் வசித்தனர். ஆனால் இன்று இவ்வெண்ணிக்கை 50709 ஆகக் காணப்படுகின்றது.

தீவகக் கல்வி வலயத்தின் கல்வி வளர்ச்சியை முன்னெடுப்பதற்கு இப் பகுதிகளில் குறிப்பாக, பெரிய பாடசாலைகளை மேலும் வலுப்படுத்த வேண்டும். பரீட்சை பெறுபேறுகளை நோக்கும் பொழுது 1 A B தரப் பாடசாலைகள் ஒப்பீட்டு ரீதியில் சிறப்பாகச் செய்துள்ளன. மேலும் இப்பெரிய பாடசாலைகளில் இருக்கும் வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. மாணவர்களின் நலன் கருதி பல சிறிய பாடசாலைகளில் க.பொ.த (சா/த) வகுப்புக்களை வைப்பதை தற்காலிகமாகத் தவிர்க்க வேண்டும். மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது பெரிய பாடசாலைகளில் இடவசதியின்மை ஏற்படும்போது, சிறிய பாடசாலைகளில் க.பொ.த (சா/த) வகுப்புகள் வைப்பதை யோசிக்கலாம். மாணவர்களின் பிரயாணவசதி, தூரம், நேரம் போன்றவற்றைக் கருதி சில இடங்களில் சிறிய பாடசாலைகளில் க.பொ.த (சா/த) வகுப்புகள் வைக்கவேண்டிய தேவை இருந்தால் மாத்திரம் வைக்கவேண்டும். மற்றைய காரணங்களுக்காக ஒரு சில மாணவர்களை கொண்டு க.பொ.த(சா/த) தர வகுப்பு வைப்பதைத் தவிர்க்க வேண்டும். பரீட்சை பெறுபேறுகள் இதற்குச் சாதகமாகவுள்ளன.

தீவுப் பகுதிக்கு போதியளவு ஆசிரியவளம், குறிப்பாக இளைய பட்டதாரிகள், கல்விக் கல்லூரி டிப்ளோமாதாரிகள் நியமிக்கப்பட்டும், கல்வி அடைவு குறைவாக இருப்பதற்கான காரணங்கள் ஆராயப்படவேண்டும். நல்ல ஆசிரிய வளம் வீணடிக்கப்படுகின்றதென்ற குறைபாடு உண்டு. ஆசிரிய /மாணவ தொடர் ஊடாட்டம் இல்லாது, மாணவர்களின் பரீட்சை அடைவுக்கு ஆசிரியர்கள், அதிபர்கள் வகை கூறும் (accountability) நிலையிலிருந்து விலக முற்படுவதும் தவிர்க்கப்பட்டு, மாணவர்களின் நல்ல அடைவுகளே ஆசிரியர்கள், அதிபர்களின் இலக்காக முன்னெடுக்க வேண்டும். இந்த நல்ல இலக்கை அடைய கல்வி நிர்வாகிகள், அதிபர், ஆசிரியர்கள், பிரதேசத்துக்கு பொருத்தமான தந்திரோபாயங்களை கடைப்பிடிக்க வேண்டும். நாட்டினதும், பிரதேசத்தினதும், எதிர்காலம் வகுப்பறையில் தங்கியிருப்பதால் இளம் பிள்ளைகளுக்கு நல்ல கல்வி கிடைக்கச் செய்வது எல்லோரது கடமையாகும். பின்தங்கி நிற்கும் தீவகக் கல்வியை முன்னெடுக்க யாவரும் இணைந்து செயற்படுவோமாக. ♦

> சொந்த வீட்டிலேயே இருக்கும் கள்வனை ஒருவன் காவல் புரிய முடியாது.
>
> -அரேபியா

வலம்புரி

## மன்னார் ஆயருக்கு நடவடிக்கை எனில் பௌத்த பிக்குகளை என்ன செய்வது?

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக அறிக்கை வெளியிட்டதற்காக மன்னார் ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

மடுமாதா தேவாலயப் பகுதியை இராணுவத்தினர் கைப்பற்றிய பின்னர் அப்பகுதியை புனித பிரதேசமாக்குமாறு மன்னார் ஆயர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இராணுவம் கைப்பற்ற முன்னர் இந்தக் கோரிக்கையை விட்டிருக்கலாமே என ஜாதிக ஹெல உறுமய கேட்பது அர்த்தமற்றதாகும்.

ஏற்கனவே பல வருடங்களுக்கு முன்னர் மடுமாதா தேவாலயப் பகுதியை புனித பிரதேசமாக ஆக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை ஜாதிக ஹெல உறுமயவுக்கு தெரியாமல் இருக்கலாம்.

ஆனால் மடுமாதா தேவாலயப் பகுதியை புனித பிரதேசமாக்குவதென்பது அந்தப் பகுதியில் யுத்தம் இடம்பெறும்போது முதன்மையும், முக்கியமும் பெறுகின்றது.

எனவே சரியான சந்தர்ப்பத்தில் மன்னார் ஆயர் விடுத்த கோரிக்கை பொருத்தமானதாகும்.

மன்னார் ஆயர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடும் அதேநேரம் மடு தேவாலயப் பகுதியை புனிதப் பிரதேசமாக ஆக்குமாறு எவரும் கோரிக்கை விடவில்லை என,பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அப்படியான அரசும் ஜாதிக ஹெல உறுமயவும் மடுத் தேவாலயத்தை தமக்கு சாதகமாக்கிக் கொள்ள முனைகின்றமை தெரிகின்றது.

அதாவது மடுத் தேவாலயப் பகுதியை புனிதப் பிரதேசமாக்குமாறு எவரும் தம்மிடம் கோரிக்கை விடவில்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூறும்போது, அரச ஆதரவுக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய, இராணுவம் மடுவைக் கைப்பற்றிய பின்னரே அந்தப் பிரதேசத்தை புனிதப் பிரதேசமாக்குமாறு மன்னார் ஆயர் கேட்பதாகக் கூறுவது எப்படி?

ஆக, அரசுக்கு மடுப்பகுதியை புனிதப் பிரதேசமாக்கும் எண்ணம் அறவே கிடையாது.

எனவே தம்மிடம் எவரும் கோரிக்கை விடவில்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூற, மன்னார் ஆயர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதாக ஜாதிக ஹெல உறுமய இவ்வாறு கூறுகிறது.

இவையாவற்றுக்கும் மேலாக மன்னார் ஆயர் மீது நடவடிக்கை எடுப்பதாக இருந்தால் தமிழ் மக்களுக்கு எதிராக பல அட்டூழியங்களை இந்த நாட்டில் விதைத்துவிட்ட பௌத்த பிக்குகளுக்கு என்ன? நடவடிக்கை எடுப்பது.

## தனியார் ஆசிரியர்கள் பரீட்சைத் திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்டும் -பரீட்சை ஆணையாளர்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரண மற்றும் உயர்தர மாணவர்களுக்கு கற்பிக் கும் தனியார் ஆசிரியர்கள் பரீட்சைத் திணைக் களத்தில் பதிவு செய்யப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத் தீர்மானத்தை பரீட்சைகள் திணைக் களம் மேற்கொண்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர்நாயகம் அனுர எதிரி சிங்க தெரிவித்துள்ளார். ஆசிரியர்களின் கற்பித்தல் முறையில் உள்ள முரண்பாடுகள் காரணமாக இந்த தீர்மா னம் மேற்கொள்ளப்பட்டுள்ள தாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தின்மூலம் செயல் திறன் மிக்க ஆசிரியர்களை உரு வாக்க முடியும் என அவர் நம்பிக்கை வைத்துள்ளார்.

இந்த திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் பதிவு இலக்கம் வழங்கப்பட வுள்ளதாகவும் இதன் மூலம் மாணவர்கள் தனியார் வகுப்பு ஆசிரியர்கள் தொடர்பில் விழிப்பாக இருக்க முடியும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ஓ-7)

### சீரற்ற கால நிலையால் மியான்மரிலிருந்து அரிசி வருவதில் தாமதம் -வர்த்தக அமைச்சு

அரசாங்கம் மியான்மரில் இருந்து கொள்வனவு செய்த அரிசி சீரற்ற கால நிலை காரணமாக நாட்டை வந்தடைவதில் தொடர்ந்தும் தாமதம் நிலவுவதாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அரிசித்தொகை ஏற்றப்பட்ட 3 கப்பல்கள் சீரற்ற காலநிலை காரணமாக றங்கூன் துறைமுகத்தில் நங்கூரம் இடப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஆர். எம்.கே. ரட்நாயக்க கூறியுள்ளார்.

குறிப்பிட்ட 3 கப்பல்களிலும் 22 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி உள்ள தாக அவர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும் எதிர்வரும் 17 ஆம் திகதி அளவில் இந்த அரிசியை உள் நாட்டு சந்தையில் விநியோகிக்க எண்ணியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அடுத்த வாரம் அளவில் வவுனியாவிலிருந்து மேலும் 5ஆயிரம் மெற்றித்தொன் அரசி கிடைக்கவுள்ள தாக வர்த்தக நுகர்வோர் அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-7)

## துறைமுகங்களுக்கு வரும் கப்பல்களுக்கு எரிபொருள் விநியோகம் ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கைத் துறைமுகங்களுக்கு வருகின்ற மற்றும் இலங்கைக் கடற்பரப்பில் பயணிக்கும் கப்பல் பயணிகளுக்கான எரிபொருள் விநியோகத்தை இலங்கை பெற்றோலியக்கூட்டுத் தாபனம் ஆரம்பித்துள்ளது. இதன் மூலம் பாரிய இலாபத்தை ஈட்ட முடியும் என கூட்டுத்தாபனத்தின் நிறுவன நடவடிக்கைகளுக்கான பிரதிப் பொது முகாமையாளர் ஸ்ரீ சுதுவெல்ல தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இந்த எரிபொருள் நடவடிக்கை எதிர்காலத்தில் மேலும் விஸ் தரிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் முக்கிய துறை முகங்களாக கொழும்பு, காலி ஹம்பாந்தோட்டை ஆகிய துறைமுகங்களூடாக எரிபொருள் விநியோகம் பிரதானமாக முன்னெடுக்கப்படுவதாக பிரதி முகாமையாளர் கூறியுள்ளார்.

அத்துடன் ஹம்பாந்தோட்டை கடற்பரப்பில் தூர இடங்களில் பயணிக்கும் சர்வதேச கப்பல்களுக்கு கடற்பரப்பில் வைத்தே எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-7)

## ஆங்கில ஆசிரியர்களுக்கு 'சிவனோபாய" ஆங்கில மொழி விருத்தித் திட்டம்

(கொழும்பு)

ஆங்கில ஆசிரியர்களுக்கு விஷேட பயிற்சிகளை வழங்க அவர்களது திறமைகளை விருத்தி செய்யும் பொருட்டு சிவனோபாய ஆங்கிலமொழி விருத்தித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின்அனுசரணையோடு, தனியார் பிரிவுகளையும் இணைத்து இந்த ஆங்கில மொழி விருத்தித்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. இதனடிப்படையில் அரச, தனியார் பாடசாலைகளில் கற் பிக்கின்ற ஆங்கில பாட ஆசிரியர்கள் பயிற்சியளிக்கப்படவுள்ளனர். இதுதவிர, 18 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்ட 50 ஆயிரம் இளைஞர் யுவதிகளுக்கும் ஆங்கில மொழிப்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கு தமது அன்றாட நடவடிக்கைகளினபோது ஆங்கில மொழி பயன்பாட்டுக்குத் தேவையான ஆங்கில அறிவை வழங்குதல், இலத் திரனியல் ஊடகங்களுடனான வர்த்தக நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆங்கில மொழி அறிவை வழங்குதல் தகவல் தொழில்நுட்பத்துடனான வர்த்தக, கைத்தொழில் விடயங்கள் சம்பந்த மான ஆங்கில அறிவை விருத்தி செய்தல் என்பன இந்த விசேட திட்டத்தினூடாக மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது. (அ-5)

## தென்னிலங்கை மக்களின் கிளர்ச்சியைத் தடுக்கவே தமிழர்கள் மீதான கைதுகள் இடம் பெறுகின்றன

### இடது சாரி முன்னணி அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் நிர்வாக சீர்கேட்டால் நெருக்கடியில் சிக்கியுள்ள சிங்கள மக்களின் மனோநிலையை சீர்செய்யவும் தென்இலங்கையில் கொதிப்படைந்துள்ள மக்களின் அரசுக்கெதிரான கிளர்ச்சியை தடுப்பதற்காகவுமே தமிழ் மக்கள் வகை தொகையின்றி கைது செய்யப்பட்டு பழி வாங்கப்படுகின்றனர் என்று இடதுசாரி முன்னணி தெரிவித்துள்ளது.

தமிழ்மக்கள் கைது செய்வதை கண்டித்து இடதுசாரி முன்னணியின் அமைப்புச் செயலாளர் சமில் ஜயநித்தி விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அண்மைக்காலமாக கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தமிழ் மக்கள் வகை தொகையின்றி கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையங்களிலும் தடுப்பு முகாம்களிலும், சிறைக் கூடங்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிராக உயர் நீதிமன்றம் விடுத்த கண்டனத்தையும் பாதுகாப்பு படையினர் உதாசீனம் செய்வது போல் அவர்களது நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

அத்தோடு யுத்த முனையில் படையினருக்கு ஏற்படும் பின்னடைவை மூடி மறைக்கவும இவ்வாறான பழிவாங்கும் நடவடிக்கைகள், தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்றன.

நாட்டில் தினம் தினம் அதிகரிக்கும் விலைவாசி உயர்வா[illegible] இ[illegible]ற்கை அனர்த்தங்களாலும் மக்கள் [illegible]யரங்களை அனுபவித்து வருகின்றனர்.

இந் நிலையால் தென்பகுதி மக்கள் கொதிப்படைந்து அரசுக்கு எதிராக கிளர்ந்தெழ தீர்மானம் மேற்கொண்டுள்ளனர். இதனை தடுக்கவே தமிழ் மக்கள் மீதான கைதுகள் இடம்பெறுகின்றன.

சர்வதேசரீதியிலும், இந்நாடு உழைக்கும் வர்க்கத்தினராலும் ஓரங்கட்டப்பட்டுள்ள அரசாங்கத்திற்கு எதிராக போராட முன்வர வேண்டும் இனிவரும் காலங்கள் போராட்டக்காலங்களாகும். (அ-5)

## ஓலைச் சுவடிகள் 26

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

### நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

**தியானம் வாழ்க்கைக்கு பயனளிப்பது எப்படி?**

தியானம் வாழ்க்கைக்கு பயனளிக்கும் என்று பழைய தலைமுறை நமக்கு கற்பித்திருக்கின்றது.

சாந்தமாயிருந்து ஒரே சிந்தனையுடன் தன்னிலும் தன்னைச் சுற்றியுள்ள எல்லாவற்றிலும் குடிகொள்ளும் ஜீவசக்தியே இறைவன் அருளும் சக்தி என்று மனதில் கொண்டுள்ள ஆராதனையே தியானம்.

யுகங்கள் கழியும் போது நிகழவிருக்கும் மனதின் சுத்திகரிப்பு இந்த ஜென்மத்திலேயே பரிணமிக்கும் சாதனையென்று தியானத்தை சிறப்பிக்கலாம்.

தியானத்தின் பயன்களை நவீன அறிவியல் அங்கீகரித்துள்ளது. மனதுக்கும் புத்திக்கும் சக்தி பெற ஒரே ஒரு பாதையை மட்டுமே நவீன விஞ்ஞானம் உபதேசிக்கின்றது. அது தியானத்தின் பாதை மனதை ஒரு நிலைப்படுத்தி ஒரு தனிப்பட்ட புள்ளியில் மையப்படுத்தி தியானம் செய்தால் மனதை அலட்டும் எல்லா சிந்தனைகளிலிருந்தும் விடுதலை பெறலாம்.

தியானத்தின் ஆழமான நிலையில் செல்லும் போது மூளையிலுள்ள பீற்றா அலைகள். அல்பா, காமா, டெல்ரா, தீற்றா என்ற அலைகளாக மாறுதலடைகின்றன என்று அறிவியல் கற்பிக்கின்றது. இவ்வலைகளுக்கு மூளையை அனேகம் மடங்கு விருத்தியடைந்து செயற்படச் செய்யும் திறன் உண்டு என்பது ஈ.ஈ.ஜி ஆராய்ச்சி வாயிலாக நிரூபிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் தங்கள் மருத்துவ நூல்களில் தியானத்திற்குத் தகுந்த இடமளித்துள்ளன.

# இலங்கைக்கான அனைத்து உதவிகளையும் இந்திய அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்

## மன்மோகன் சிங்கிற்கு வை.கோ. கடிதம்

(புதுடில்லி)

தவறுக்கு மேல் தவறு செய்யும் இந்திய அரசை மன வேதனையோடு குற்றஞ்சாட்டுவதைத் தவிர வேறு வழியில்லை என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வை.கோ. தெரிவித்துள்ளார்.

பண்டிதர் ஜவஹர்லால் நேரு, திருமதி இந்திரா காந்தி ஆகியோரால் தொலைநோக்குப் பார்வையோடு உருவாக்கப்பட்ட இந்திய வெளியுறவுக் கொள்கைகளைக் காற்றில் பறக்க விட்டு தவறுக்கு மேல் தவறு செய்யும் இந்திய அரசை மன வேதனையோடு குற்றஞ்சாட்டுவதைத் தவிர வேறு வழியில்லை என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தின் பொதுச்செயலாளர்வை.கோ. தெரிவித்துள்ளார்.

ஆயுதங்கள் வாங்க இலங்கை அரசுக்கு இந்தியா நிதிக் கடன் வழங்கக் கூடாது என்று வலியுறுத்தி நேற்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் இந்திய வெளிவிவகாரத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கும் வை.கோ. கடிதம் அனுப்பியுள்ளார்.

வை.கோ. எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஆயுதங்கள் வாங்க இலங்கைக்கு இந்தியா உதவி என்ற தலைப்பில் 27 ஏப்ரல் 2008 திகதியிட்ட எக்கனொமிக் ரைம்ஸ் ஆங்கில நாளிதழில் வந்த வேதனை தரக்கூடிய செய்தியை தங்களின் உடனடிக் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

இலங்கை அரசு அங்கு வாழும் தமிழர்களுக்கு எதிராக இனப் படுகொலையைத் தொடர்ந்து நடத்தி வருகின்றது என்பது அனைவரும் ஏற்றுக் கொண்ட ஓர்உண்மையாகும். இந்த உண்மை 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் எட்டாம் திகதி பிரான்ஸ் அரசு ஏற்பாடு செய்திருந்த ஆழிப் பேரலை மறுவாழ்வு மையத்தின் தன்னார்வத் தொண்டர்களாகப் பணியாற்றி வந்த 17 தமிழ் இளைஞர்கள் உச்சந்தலையில் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பாக உண்மை கண்டறியும் உயர் நிலைக் குழு அளித்த அறிக்கையின் மூலம் உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

மேலும் திருகோணமலையில் 5 பல்கலைக்கழ மாணவர்கள் கொலை செய்யப்பட்டதும் அந்தக் குழு உறுதி செய்திருக்கின்றது. ஐ.நா. சபை கொழும்பில் அலுவலகம் அமைக்க இலங்கை அனுமதி மறுத்ததும் மனித உரிமைகள் கழகத்தின் தலைவர் திருமதி லூயிஸ் ஆர்பர் இலங்கையின் வடக்குப் பகுதியில் தமிழர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட அனுமதி அளிக்காததும் இலங்கை அரசு தமிழர்களை இனப்படுகொலை நிகழ்த்தி வருகின்றது என்பதை உலக நாடுகளுக்கு வெளிப்படுத்தியது.

இலங்கையில் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழர்களுக்கு தமிழக மக்கள் வழங்கிய மருந்துகளையும் உணவுப் பொருள்களையும் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் அனுப்புவதற்கு இந்திய அரசு அனுமதி மறுத்து வருவது பொறுத்துக் கொள்ள இயலாத வேதனைக்குரிய ஒன்று.

இந்திய அரசின் இந்த மனிதாபிமானமற்ற அணுகுமுறை அனைத்துலக விதிகளுக்கும் நடைமுறைகளுக்கும் எதிரானது மட்டுமல்லாமல் ஜெனீவா ஒப்பந்தத்தின் கொள்கைகளுக்கும் மாறானது ஆகும்.

இலங்கையில் அவதியுறும் தமிழர்களுக்கு அளிக்க வேண்டிய உணவுப் பொருள்களுக்கும் மருந்துப் பொருள்களுக்கும் தடை விதித்து விட்டு இலங்கை அரசுக்கு பெருமளவில் நிதியுதவியை கிட்டத்தட்ட அன்பளிப்பாகக் கொடுப்பதுபோல் அளித்து அவர்களது இராணுவத்தைப் பலப்படுத்த இந்தியா உதவுவது மிகுந்த வேதனையளிப்பதாகவுள்ளது.

இந்திய அரசாங்கம் வேண்டுமென்றே - தெரிந்தே இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு மேற்கொள்ளும் கொடூரத் தாக்குதலுக்குத் துணைபோகின்றது என்று குற்றஞ்சாட்டுகின்றேன்.

இலங்கை அரசுக்கு நிதி, கடன் உதவி செய்ய இருக்கும் முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ அந்த நாட்டுக்கு அளிக்கும் எந்த உதவிகளையும் உடனடியாக நிறுத்துமாறும் பெருத்த மன வேதனையோடும் வருத்தத்தோடும் தங்களை வேண்டிக் கொள்கின்றேன் என்று அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## கம்பஹா மாவட்டத்திற்கு இரு புதிய எம்.பிக்கள்

(கொழும்பு)

கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அமைச்சர் அநுர பண்டாரநாயக்க மற்றும் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே ஆகியோரின் மறைவையடுத்து ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக இரண்டு புதிய அங்கத்தவர்கள் சபாநாயகர் வி.ஜே.மு. லொக்கு பண்டார முன்னிலையில் இன்று நாடாளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளனர்.

சரன குணவர்த்தன மற்றும் துலிப் விஜேசேகர ஆகிய இருவருமே இவ்வாறு நாடாளுமன்ற அங்கத்தவர் பதவிகளை புதிதாக ஏற்கவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## முகமாலை மோதலில் இராணுவத்திற்கு இழப்பு

### பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

முகமாலை முன்னரங்கப் பகுதியில் அண்மையில் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற மோதல்களில் இராணுவத்தினருக்கு பாரிய இழப்பு ஏற்பட்டிருந்ததை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டுள்ளார்.

அரசாங்கத் தொலைக்காட்சியில் இடம்பெற்ற நேரடிச் செவ்வியில் கலந்து கொண்டபோதே அவர் இதனை ஏற்றுக் கொண்டிருந்தார். நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் இருந்ததுடன் நீண்ட காலத்தின் பின்னர் இவ்வாறானதொரு அனுபவம் ஏற்பட்டிருந்ததாக அவர் கூறியிருந்தார்.

இராணுவத் தரப்பினருக்கு ஏற்படும் இழப்புக்களை மறைத்து அவற்றைக் குறைத்து கூறவேண்டிய தேவை அரசாங்கத்துக்கு இல்லை. மோதலின் இறுதியில் இராணுவத்தினரின் உயிரிழப்புக்கள் குறித்து மறைத்தால் அவர்களின் உறவினர்களால் எவ்வாறும் கேள்வியெழுப்பப்படும் எனவும் கோத்தபாய குறிப்பிட்டிருந்தார்.

பாதுகாப்புத்தரப்பினரையும் இராணுவ முன்னெடுப்புக்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் வகையிலேயே ஊடகங்கள் செய்திகளை வெளியிடுகின்றன. கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினருக்கு கிடைத்த வெற்றியை மீண்டும் பாராட்டியிருந்த கோத்தபாய ராஜபக்ஷ இராணுவ வெற்றியாலேயே தற்பொழுது கிழக்கு மாகாணத்துக்கு அரசியல்வாதிகள் செல்லக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக கூறியிருந்தார். (எ-5)

## புதிய நாடாளுமன்றக் குழுத் தலைவரை நியமிக்க ஜே.வி.பி ஆலோசனை

ஜே.வி.பியின் புதிய நாடாளுமன்ற குழுத் தலைவராக ஒருவர் விரைவில் நியமிக்கப்படுவாரென ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினர் அநுரகுமார திஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் சார்பில் நாடாளுமன்றத்தில் கதைக்கும் பொறுப்பு விமல் வீரவன்சவுக்கு வழங்கப்பட்டிருந்தது. அடுத்த நாடாளுமன்ற அமர்வில் விமல் வீரவன்ச நாடாளுமன்றக் குழுத்தலைவராக பதவி வகிப்பாரா எனக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அநுரகுமார திஸ்ஸநாயக்க கடந்த காலங்களில் விமல் வீரவன்ச தவிர்ந்த வேறு பல நாடாளுமன்ற உறுப்பினர்களால் அந்தப் பதவி வகிக்கப்பட்டிருந்ததாக குறிப்பிட்டார்.

கட்சியின் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி எந்தவொரு தனிநபரும் பேரம் பேசும் சக்தியை பெற்றுக்கொள்ள முடியாது. விமல் வீரவன்ச தற்போது புதிய குற்றச் சாட்டுக்களுக்கு முகம்கொடுத்துள்ளார். இரகசியங்களை வெளியிட்டதாக அவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

உள்விவகாரங்களை விமல் வீரவன்ச பகிரங்கப்படுத்தியுள்ளதுடன் கட்சியை துண்டுபடுத்தியமைக்கான பொறுப்பை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட் டில் அநுரகுமார திஸ்ஸநாயக்க மேலும் தெரிவித்தார். (ச-5)

## மகேஸ்வரன்...

கொலை தொடர்பாக இணையத்தள மொன்றில் வெளியான தகவலை அடிப்படையாகக் கொண்டே பி.பி.சி. செய்திச் சேவைக்கு பாதுகாப்பு பேச்சாளர் தனது கருத்தை தெரிவித்ததாக குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் கூறினார்.

இந்தக் கொலை சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கைகள் யாவும் சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் அவர் தெரிவித்துள்ளார். (ச-2)

## புலிகளுக்...

காகவும் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கவும் பயன்படுத்துவர்.

பிரச்சினைகளுக்கான நியாயமான தீர்வுகளை அரசாங்கங்கள் முன்வைத்தபோதும் இலங்கை உட்பட சில ஆசிய நாடுகளிலும் ஆபிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளில் அரசாங்கம் அல்லாத அமைப்புக்கள் ஆயுதங்களைப் பயன்படுத்துவதனால் பயங்கரவாதமும் வன்முறைகளும் அதிகரித்துள்ளன. இதனால் பெரும் அழிவுகள் ஏற்பட்டுள்ளது என்றார். (ச-5)

## முகமாலையில்...

குதல் தொடுத்தனர்.

இத் தாக்குதல் முயற்சிக்கு எதிராக விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் எட்டுப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 20ற்கும் அதிகமான படையினர் காயமடைந்துள்ளனர்.

படைத் தரப்பைச் சேர்ந்த ஒருவரின் உடலம் விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டுள்ளது. இதில் படையினரிடமிருந்து ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## ரணில் பயணித்த ஹெலி...

நுட்ப கோளாறு ஏற்பட்டதும் விமானப்படை விமானி சாதுரியமாக ஹெலி கொப்டரை எது வித ஆபத்துமின்றி தரையிறக்கியுள்ளார்.

திடீரென மையங்கனை விளையாட்டு மைதானத்தில் ஹெலிகொப்டர் அவசரமாக தரையிறங்கியதையடுத்து அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டதுடன் பொதுமக்களும் ஒன்று கூடினர்.

அவசரமாக தரையிறங்கிய ஹெலிகொப்டரில் இருந்து எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் இறங்கியபோதே பொதுமக்களுக்கு விடயம் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து கொழும்பிலிருந்து சென்ற மற்றொரு ஹெலிகொப்டரில் மையங்கனை விளையாட்டுமைதானத்திலிருந்து எதிர்க்கட்சித் தலைவர் தலைமையிலான குழுவினர் மாலை 6.30 மணியளவில் புறப்பட்டு கொழும்பைச் சென்றடைந்தனர்.

மட்டக்களப்பு நகரில் ஐக்கிய தேசியக்கட்சியின் பிரசாரக் கூட்டம் நேற்று பிற்பகல் முதல் மாலை வரை நடைபெற்றிருந்தது. இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய பின்னரே ரணில் விக்கிரமசிங்க அங்கிருந்து ஹெலிகொப்டரில் கொழும்பு நோக்கி புறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ச-2.5)

## கொழும்பிலிருந்து தமிழ்...

கடந்த வருடம் கொழும்பில் விடுதிகளில் தங்கியிருந் தமிழ் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு வவுனியாவுக்கு கொண்டு செல்லப்பட்டமையை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சட்டமா அதிபர், நீதிமன்றத்தில் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த மனுவை உயர் நீதிமன்றத்தில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தாக்கல் செய்திருந்தது. தமிழ் மக்கள் கொழும்பிலிருந்து வெளியேற்றப்படுவது சட்டவிரோதமானது என்று நீதிமன்றம் உணர்ந்து தமிழ் மக்கள் வெளியேற்றப்படுவதனை தடுக்க இடைக்கால உத்தரவொன்றை பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான குழுவினர் முன்னர் அறிவித்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது தமிழ் மக்கள் எதிர்காலத்தில் கொழும்பில் இருந்து வெளியேற்றப்பட மாட்டார்கள், கொழும்புக்கு வருவது தடுக்கப்பட மாட்டாது என உயர் நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் உறுதியளித்துள்ளார். இந்த உறுதிப்பாட்டை அடுத்து மனு மீதான விசாரணை நேற்றுடன் முடிபடைந்தது. (ச-2)

## கடற்படை...

விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டுள்ளன.

முன்னதாக கடற்படையினரின் முக்கிய தளங்களை நோக்கி ஏக காலத்தில் விடுதலைப் புலிகள் எறிகணை வீச்சுத்தாக்குதலை நடத்தினர் என்றார் அவர்.

கடற்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான காவல் நிலைகள் ஊடாகவே அண்மைக் காலத்தில் மன்னார் கடற்தொழிலாளர் களுக்கு கடலில் மீன் பிடிப்பதற்கான அனுமதியை கடற்படையினர் வழங்கி வந்தனர் என தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## மீள்குடியமர்...

தெரிவித்துள்ளார்.

இந்த விவசாயக் குடும்பங்களை மீளக் குடியேற்றுவதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், யாழ்.மாவட்ட அரச அதிபர், யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஆகியோரால் பெயரிடப்படும் மூவர் உட்பட்ட குழுவொன்றை அமைக்குமாறும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-2)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.05.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.